விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

சகலவித பல் வியாதிகளையும் போக்கவல்லது
அண்ணா பற்பொடி
இலங்கையின் எப்பாகத்திலும் கிடைக்கும்.
கூடுதலாக அண்ணா பற்பொடியை வாங்கும் வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு
அண்ணா தொழிலகம்
இணுவில்
தொலைபேசி: 7412

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
79-3-26
PERIODICALS DIVISION
LIBRARY

திருமுறைச் சிறப்பு
10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 மில்க்வைற் பார்சோப் அல்லது 2 மில்க்வைற் சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி சிறந்த நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்,
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

மலர் 21 பங்குனி 11 ரபி. ஆகி 25 ஞாயிற்றுக்கிழமை (25—3—79) இதழ் 43

### அமிரின் இந்திய பேச்சுக்கள் குறித்த

# பத்திரிகை செய்திக்கு வடபகுதி இயக்கங்கள் பலத்த கண்டனம்

## தென் இலங்கை பத்திரிகையாளரிடம் பிரதிநிதிகள் கருத்து

(யாழ்ப்பாணம்)

**சிங்களமக்களுடன் இனிமேல் ஒற்றுமையாக வாழமுடியாதென்றும். ஆயுதப்போராட்டம் மூலம் விடுதலை பெறுவதே ஒரேவழியென்றும் எதிர்க்கட்சித்தலைவர் திரு ஏ. அமிர்தலிங்கம், தமிழ்நாட்டில் பேசியதாக பத்திரிகைகளில்வெளிவந்த செய்திக்கு வடபகுதி இளைஞர் இயக்கங்களும், பலகட்சிப்பிரதிநிதிகளும், பலத்த கண்டனம் தெரிவித்தனர்.**

பொறுப்புவாய்ந்த தலைவரான திரு அமிர்தலிங்கம் அப்படிப் பேசியிருக்கமாட்டார் எனத்தான் கருதுவதாக, தமிழ் இளைஞர்பேரவையைச்சேர்ந்த திரு த சந்ததியார் கூறியதுடன், தமிழர் பிரச்னையை அரசு தீர்த்துவைக்காவிட்டால், ஆயுதம் ஏந்துவது தவிர்க்கமுடியாதென்றும் தெரிவித்தார்.

யாழ்' அரசாங்க செயலகத்தில் கொழும்பிலிருந்துவந்த உள்ளூர் பத்திரிகையாளர் கலந்துகொண்ட கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க அதிபரும், யாழ். கலாச்சாரமன்றத் தலைவருமான திரு லயனல் பெர்ணண்டோ தலைமையில்நடந்த இக் கூட்டத்தில்' தமிழ் இளைஞர்பேரவை [தனிவழி], தமிழர் முற்போக்கு இயக்கம், மக்கள் விடுதலைமுன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி [இடது], சமசமாஜக்கட்சி ஆகியனவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### தனிக்குழுவாக சந்தித்தனர்

பத்திரிகையாளர் குழுவினர் ஆரம்பத்தில் தனித்தனிக்குழுவாக இயக்கத்தினரைச்சந்தித்தனர். இறுதியில் எல்லா இயக்கத்தினரும் ஒரே இடத்தில் கூடி, பத்திரிகையாளர்களின் சந்தேகங்களுக்குப் பதிலளித்தனர்.

சிங்களமக்களுடன் தமிழ்மக்கள் ஒற்றுமையாக வாழமுடியாதென்றும், ஆயுதபோராட்டமூலம் விடுதலைபெறுவதே ஒரே வழியென்றும் எதிர்க்கட்சித்தலைவர் திரு.ஏ அமிர்தலிங்கம் தமிழ்நாட்டில் பேசியதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை, இங்கு சமுகமளித்திருக்கும் இயக்கங்கள், ஆதரிக்கின்றனவா? என பத்திரிகைநிருபர் ஒருவர் கேட்டார்;

### யோகேந்திரா துரைசுவாமி

இதற்கு முதலில் பதிலளித்த தமிழர் முற்போக்கு இயக்கத் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி கூறியதாவது:-

நாங்கள் ஐக்கியஇலங்கையை விரும்புகின்றோம். ஐக்கியஇலங்கையில் தமிழர்கள் கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும் வாழவேண்டும். இதற்கு சில வழிவகைகள் செய்ய வேண்டும்,

### பிரதேச சுயாட்சி

தமிழருக்கு பிரதேசசுயாட்சி வழங்கப்படவேண்டும் 2500 வருடங்களாக தமிழர்களும் சிங்களவர்களும் தங்கள் தங்கள் பிரதேசங்களில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள், அரசின் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும், சிங்களவர் தங்கள் சொந்தப் பணத்தில், காணிவாங்கிக்குடியேறுவதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை, மனித உரிமைகள் முழுமையாக வழங்கப்பட வேண்டும்.

கொழும்பிலுள்ள அரசாங்க காரியாலய பெயர்கள் தனிச் சிங்களத்தில் மட்டுமே இருக்கின்றன. இருதேசிய மொழிகளிலும் சகலபெயர்ப்பலகைகளும் இடம்பெறவேண்டும் ஒவ்வொரு அரசாங்க ஊழியரும் தாங்கள் கடமையாற்றும் பிரதேச மக்கள்பேசும்மொழியை தெரிந்திருக்கவேண்டும். சிங்களவர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றினால் அவருக்குத் தமிழ் தெரிந்திருக்கவேண்டும். இவைகள் நடைபெற்றால் இளைஞர் மத்தியில் தோன்றியுள்ள வெறுப்பு மறையும். இந்தநிர்வாக மாற்றங்களை ஒரே இரவில் செய்துமுடிக்க முடியாது.

### திறமைக்கு முதலிடம்

பல்கலைக்கழக பிரதேசத்தில் திறமைக்கு முதலிடம் அளிக்கப்படவேண்டும் ஐக்கியஇலங்கையை விரும்பும் மக்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள் என்பதை அரசு அறிய வேண்டும்.

### வெளியார் தலையீடு தேவையில்லை

சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த திரு. சிவஜோதி கூறியதாவது!

நமதுநாட்டின் பிரச்னையை தீர்க்க வெளியார் தலையீடு தேவையில்லை இந்தியாவிலுள்ள பிரச்னைகளையே திரு தேசாய் தீர்க்கமுடியாமல் தவிக்கும்போது எப்படி நம் நாட்டு பிரச்னையைத் தீர்க்கப் போகிறார்

### தேசாய் பிரச்னையை வளர்க்க விரும்புகிறார்

திரு, தேசாய் பிரச்னையை தீர்க்க விரும்பவில்லை. அவர் பிரச்னையை மேலும் வளர்த்து பதவியில் இருக்கப்பார்க்கிறார் திரு அமிர்தலிங்கம் வெளிநாட்டில் பேசியதை இந்நாட்டில் பேசியிருக்கலாம் ஆயுதப் போராட்டம் என்று கூறியிருக்கிறார். இப்படி எத்தனை போராட்டம் நடந்துள்ளது,

### வல்வெட்டித்துறையில் சூடுவிழுந்தால்

வல்வெட்டித்துறையில் சூடு விழுந்தால் யாழ்ப்பாணத்தில் மக்களைத் தாக்குகிறார்கள் இது என்ன நடைமுறை

இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த திரு தணிகாசலம் கூறியதாவது!

சாதாரண மக்கள் சார்பில் நாம் பிரிவினை பற்றிய அப்பட்டமான பேச்சுக்களை வன்மையாக எதிர்க்கின்றோம்

திரு சந்ததியார் கூறியதாவது

திரு அமிர்தலிங்கம் வெளிநாட்டில் பேசியுள்ளது பற்றி கேட்கிறீர்கள் பத்திரிகையில் வந்த செய்தியானபடியால் அதை அவரிடமே கேட்க வேண்டும், பல்வேறுபேர் பல்வேறு விதமாக அப்பேச்சு பற்றி விளக்கம் கொடுத்துள்ளமை ஆச்சரியமாக இருக்கிறது பொறுப்புவாய்ந்த தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் பேச்சைப்பற்றி நிதானமாக யோசித்தே கூறவேண்டும்

### சிங்களவரை எதிர்த்து போராடவில்லை

எங்கள் இயக்கம் சார்பில் ஒன்றை வலியுறுத்துகிறேன்

[2ம் பக்கம் பார்க்க]

## அமிர்- தேசாய் இன்று சந்திப்பு

புதுடில்லி, மார்ச் 21

இந்தியாவில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இலங்கை எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கம் நாளை ஞாயிற்றுக்கிழமையே இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவார்.

இலங்கையில் திரு. தேசாயுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையிலேயே நாளைய பேச்சுவார்த்தைகள் அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது,

இலங்கைத்தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு திரு தேசாய் எவ்வாறு முடியுமென்று இப்பேச்சுவார்த்தையின்போது ஆராயப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

### இந்திராவைச் சந்தித்தார்

இன்று திரு அமிர்தலிங்கம் முன்னை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இந்திய வெளிநாட்டமைச்சர் திரு வாஜ்பாய், உதவி ஜனாதிபதி திரு, ஜட்டி ஆகியோர் உட்பட பல தலைவர்களைச் சந்தித்தார்

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு பானபொக்க திரு அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கு விருந்தளித்து கௌரவித்தார். [ம-இ]

### மங்கையர்க்கரசியின் பேச்சுபற்றி

# இலங்கையில் தவறுகப் பிரசாரம் செய்யப்படுகிறது

[கொழும்பு]

1977-ம் ஆண்டு ஆகஸ்ட் இனக்கலவரத்தின் போது இடம்பெற்ற கற்பழிப்புச் சம்பவங்கள் பற்றியே திருமதி அமிர்தலிங்கம் இந்தியாவில் பேசியுள்ளார். இது பற்றி இலங்கையில் தவறான பிரசாரங்கள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் தொலைபேசி மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்திடம் நேற்றிரவு தெரிவித்தார்.

புதுடில்லியிலிருக்கும் திரு. அமிர்தலிங்கத்துடன் திரு சிவசிதம்பரம் தொடர்பு கொண்டபோதே திரு அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு

(2-ம் பக்கம் பார்க்க)

### அமிரின் இந்திய உரை —
## யோகேஸ் - டென்சில் பலத்த வாக்குவாதம்

[கொழும்பு]

பத்திரிகைகளில் வெளிவந்த திரு, திருமதி அமிர்தலிங்கத்தின் இந்திய உரைகுறித்து யாழ். எம்.பி. திரு.யோகேஸ்வரனுக்கும்கைத்தொழில் விஞ்ஞான பிரதி அமைச்சர் திரு. டென்சில் பெர்ணண்டோவுக்குமிடையே நேற்று முன்தி

[2-ம் பக்கம் பார்க்க]



அரியாலை காந்தி சனசமூக நிலைய மாதர் சங்கத்தினரின் மேல் மாடிக் கட்டிடத்திற்கு அரஸ்கோ தொழிலதிபர் திரு. இ. அரசரத்தினம் அத்திவாரக் கல் நாட்டுவதற்கு வருகை தந்தபோது ஊர்வலமாய் அழைத்துச்செல்லப்படுவதை இப்படத்தில் காணலாம்.

இரணைதிவு கொலை வழக்கு

# புதிய ஜூரர் சபை முன் விசாரணை

## செப். 3 வரை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

இரணைதிவு கொலைவழக்கு புதிய யூரர்சபை முன்னிலையில் விசாரணை செய்யப்பட வேண்டுமென்றகாரணத்தினால் செப்டம்பர்மாதம் 3ந் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஜனுப் எம். ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் 1972ம் ஆண்டு நவம்பர்மாதம் 10-ந் திகதி அந்தோனி மைக்கேல் கொலைசெய்ததாக மரியாள் மாசலின்மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

விசாரணையின்போது சாட்சியங்கள் மூலம் சட்டத்திற்கு மாறான தகவல்கள் வெளிவந்ததன் காரணமாக புதிய யூரர் சபையின் முன் இவ்வழக்குவிசாரணை செய்யபபடவேண்டும் என்று கூறிய நீதிபதி வழக்கை ஒத்திவைத்தார். (இ)

## அமிரின் —

1-ம் பக்கத் தொடர்ச்சி]

னம்பாராளுமன்றத்தில்பலத்த வாக்குவாதம் இடம்பெற்றது.

ஒத்திவைப்புப் பிரேரணையின்போது ஊர்காவற்றுறை எம் பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் திரு. டெனசில் பெர்னண்டோ, 'உங்கள் தலைவர் திரு. அமிர்தலிங்கம் இந்தியாவில் நமது அரசுக்கு எதிரான பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார்' என்று கூறினார், அப்போது குறுக்கிட்ட திரு. யோகேஸ்வரன், இதுபற்றி உங்களுக்கு எவ்வாறு தெரியுமென்று கேட்டார்.

டென்சில்: பத்திரிகைகளில் இதுபற்றிய செய்திகள் வெளிவந்துள்ளன.

யோகேஸ்: நாம் எந்தப் பத்திரிகைகளிலும் இச்செய்திகளைப் படிக்கவில்லை. இது குறித்து தலைவர் திரு அமிர்தலிங்கம் நாடு திரும்பியதும் அவரிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். [ம-இ]

## மங்கையர்க்...

[1-ம் பகத் தொடர்ச்சி]

கூறினார்.

அவர்கள் நாடு திரும்பியதும் இவ்விவகாரம் குறித்து விபரமான அறிக்கை ஒன்றை வெளியிடுவார்கள் என்று திரு. சிவசிதம்பரம் நேற்று இரவு திரு. அமிர்தலிங்கத்துடன் தொடர்புகொண்டு பின்னர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ம-இ)

## பத்திரிகை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சிங்கள மக்களுக்கு எதிராக நாம் போராடவில்லை எங்களை ஒதுக்குகின்ற முதலாளித்துவ அரசுக்கு எதிராக போராடுகிறோம் (பலத்த கரகோஷம்] இந்த விதமான போராட்டத்தின் வெற்றி அரசின் நடவடிக்கையில் தங்கியிருக்கிறது மக்கள் ஆயுதம் எடுத்து போராடும் நிலைமையை அரசே ஏற்படுத்தும் க-இ]

## பூர்த்திவிழா

[அளவெட்டி]

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்கோயில் மகா கும்பாபிஷேக மண்டலப்பூர்த்தி நவகுண்ட சகித சங்காபிஷேகமும் மகேஸ்வரபூசையும் நாளை மறுதினம் நடைபெறும்.

சிறப்புநிகழ்ச்சியாக அன்று மாலை பண் இசைவாணர் திரு. எ. சிவஞானம் இன்னிசை விருந்தளிப்பார்.

## தவக்கால நற்சிந்தனை

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்."

(ஏசாயா, 53:5)

நாம் செய்த பாவங்களுக்காக கிறிஸ்துநாதர் எத்துணை அளவு கொடுந்துன்பங்களையும், துயரங்களையும் ஏற்றார்! சிந்தித்துப் பார்த்தோமா? தூக்கமுடியாத பெரும் சுமையாகிய சிலுவை மரத்தைத் தோழிலே சுமந்து, செந்நீரைச் சிந்தித் துன்பங்களையும் துயரங்களையும் தாங்கினாரே, அச்செயல் யார்பொருட்டு? பாரம் தாங்கமுடியாமல் மும்முறை தரையிலே இடறிவிழுந்தாரே, அது யாருக்காக? சாட்டையால் அடித்துத் துன்புறுத்திய கொடும்பாவிகளிக்கு இரக்கம் காட்டினாரே ஏன்? எண்ணிப் பார், நீ கொடுத்த பரிசல்லவா இவைகள்.

—ஞானஒளி.

தொகுப்பு : வில்பிறெட்

## உடல்நிலையில் மாற்றமில்லை

பம்பாய், மார்ச் 24

சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனின் உடல் நிலையில் எதுவித மாற்றமுமில்லை என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

## உற்சவம்

(சரவணை)

வடபகுதியில் பிரசித்தி பெற்ற மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 29-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (அ[

## இன்று

[யாழ்ப்பாணம்[

வண்ணை ஸ்ரீ வைத்திஸ்வரன் சுவாமி கோவில் மகோற்சவம் 3-ம் நாளாகிய இன்று காலை 9 மணிக்கு பூஜையாகி உள்வீதி வலமும், மாலை 6-30 மணிக்கு பூஜையாகி விநாயகப் பெருமான் காமதேனு வாகனத்தில் வீதிவலம்வந்து அடியார்களுக்குகாட்சிகொடுப்பார். [கொ]

## நூல் விமர்சனம்

### சமூகக்கல்வி(தரம்-6)

ஆசிரியர்கள்: கே. கந்தப்பிள்ளை, கே. செல்வரத்தினம், எஸ். சண்முகராஜா. பதிப்புரிமை: கில்னர் அகடெமி, விற்பனையுரிமை: ஸ்ரீசுப்பிரமணியம் புத்தகசாலை, அளவு கிறவுண் 1/8, பக்கங்கள்: 85 விலை: ரூபா 4-50.

முன்னர் தரம் 10க்கு சமூகக்கல்வி நூலை எழுதி அமோக வரவேற்பைப்பெற்ற அதே மூன்றுஆசிரியர்கள் இப்போது திருத்தப்பட்ட -படாத திட்டத்துக்கமைய ஒருகையடக்கமான நூலை வெளியிட்டிருப்பது பாராட்டத்தக்கது.

மாணவருக்கும் பெற்றோருக்கும் ஒரே குழப்பத்தையளிக்கும் மாற்றங்கள் ஏற்பட்டு வரும்வேளையில் இப்படிப்பட்ட அனுபவமுள்ள, வகுப்பறையில் நேரடிப்போதனையில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களின் தொண்டு ஒருவரப்பிரசாதமாகும்.

சென்ற ஆண்டு க.பொ.த. ப. சா|த பரீட்சைக்கு 9பாடங்களைப் பயின்று 8 பாடங்களை யெடுத்து 6 பாடங்கள் சித்தியடைந்தால் போதுமானது என்றிருந்த மாணவர்கள் இப்பாடத்தை அலட்சியம் செய்தமையால் விஞ்ஞானபிரிவுக்குத் தகுதிபெறுதவர்கள் இப்பாடத்தில் சித்தியடையாமையால் கலைப்பிரிவிக்கும் தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள். சமூகக்கல்வியின் பாடத்திட்டம் பலபகுதிகள் இணைந்தது. ஆனால் பரந்துபட்டது. 6ம் வகுப்பிலிருந்து 10ம் வகுப்பு வரை பொதுமையம் கொண்டது. அவ்வத்தரத்தின்வயதுக்கும் தகுதிக்கும் ஏற்ற வகையில் கையாளப்படவேண்டியது. ஒன்றிணைந்த பகுதிகளில் [சரித்திரம், புவியியல் முதலியன] ஏதாவது ஒன்றுக்குக் கூடிய அழுத்தம் கொடுக்கப் படவும் கூடாது. ஆதலால் தான் அவ்வத்துறையில் கைவந்தமூவரின் இக்கூட்டு முயற்சி சிறந்து நிற்கின்றது,

தேவையான விவரங்களை இலகுவில் அறிந்துகொள்ள வாய்ப்பாகவும் சுருக்கமாகவும் கவர்ச்சியான, எளிமையான உரைநடையிலும் இந்நூல் அமைந்திருப்பது சராசரி 11 வயது மட்டுமேயுள்ள சிறுர்களுக்கு ஏற்றதாகும். படவேலைக்கென இன்னொரு நூலைத் தனியே வெளியிடாமல் மாணவர்களின் சுய முயற்சியைத் தூண்டும் வகையில் குறிப்புகளுடனும் வழிகாட்டலுடனும் நிறுத்தியிருப்பதும் நன்றே

இரு சிறு குறைகள்: கீழ் வகுப்புக்கானபடியால் இன்னும் கொஞ்சம் பெரிய எழுத்துக்களைப் பயன்படுத்தியிருக்கலாம். காணப்படும் ஒன்றிரண்டு அச்சும் பிழைகள் கூடக் கவனமாக களையப்பட்டிருக்கவேண்டும்.

மொத்தமாக எது அவசியம் எது அவசியமற்றது, எதைப் படிப்பது' எதை விடுவது என்று திண்டாடும் மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த வழிகாட்டி-இத்தரத்துக்குரிய முழுப் பாடத்தையும் உள்ளடக்கியது.

-தேவன்
யாழ்ப்பாணம்

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட 8 ஸ்ரீ 6794 போட் எஸ்கொட் (FORD ESCORT 1100 C C.) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. T. மரியாம்பிள்ளை, நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை. 1955

200 ஒரு கலன் வெற்று டின்களும், கழிவு எண்ணெயுடன் கூடிய 3 பீப்பாக்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க, சபாநாயகம், 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1957

தமிழ், ஆங்கில தட்டச்சுக்கள், டுப்ளிகேற்றர் ஆகியவை உடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரி, 38, சீனிவாசகம்வீதி, யாழ்ப்பாணம். 1996

அராலி வடக்கில் பிரதான வீதிக்கு அருகாமையில் வீடும், வளவும் விற்பனைக்குண்டு. தபால் கந்தோர் சமீபத்தில் இருக்கிறது. கிழேதரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். க. வேலும்மயிலும், 2, சோமசுந்தரம் அவென்யு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் 1994

பற்றிக்ஸ் வீதியில், பற்றிக்ஸ் மைதானத்தின் அருகில் உள்ள 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நேரடியாகத் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: 758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1993

பாவிக்கப்பட்ட 45 கலன் வெற்று றம்கள் விற்பனைக்குண்டு வேலைநேரத்தில் மட்டும் பார்வையிடலாம். மிலக்வைற், யாழ்ப்பாணம். 1999

நல்ல நிலையிலுள்ள 8 ஸ்ரீ தொடர்பிலக்கமுடைய மொறிஸ் மைனர் 1000 உடன் விற்பனைக்குண்டு. காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை பார்வையிடலாம். தொடர்பு, குமரன் டுறிஸ்ட் இன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன் 7753 (2001)

## தேவை

கற்பூர உற்பத்தித்தொழிற் சாலைக்கு கைதேர்ந்த ஆண் பெண் தொழிலாளர்கள் தேவை. 25-03-79 ஞாயிற்றுக்கிழமை நேரில் தொடர்பு கொள்ளவும். பரா இன்டஸ்ரீஸ், 'வசந்தம்' இணுவில்வீதி, மானிப்பாய். 1976

நல்ல நிலையிலுள்ள இந்தியன் வீணையொன்று தேவைப்படுகிறது நல்ல விலைகொடுத்து வாங்கப்படும். தொடர்பு: சிதம்பரப்பிள்ளை, 124, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1989

## தேவை

கண்ணாடித் தொழிற் சாலைக்கு வேலை பழகியவர்களும், வேலை பழகுபவர்களும் தேவை. வேலைக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும், சேவி கிளாஸ் அன் மெற்றல் வேக்ஸ், நீர்வேலி. 1985

## கல்வி

வீடுகள் சென்று ஆங்கில இலக்கியம் இலக்கணம்(Emma Mc Beth, Poetry) ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக்கொடுக்கப்படும். கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1962, C/o ஈழநாடு லிமிட்; யாழ்ப்பாணம். 1962

## வகுப்புகள்

ஜேர்மன் பாஷைக்கான ஆரம்ப வகுப்புகள் 2-4-79ல் ஆரம்பமாகின்றன. தொடர்பு கொள்க. சபாநாயகம், 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1956

## CLASSES

Scientific Dressmaking, Embroidery, Hair style and Cookery classes commence on April First. Mrs. Sivasubramaniam, 40, College Road, Neeraviady, Jaffna. 1995

## பயிற்சி

விசேட 3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-04-79 ஆரம்பமாகவுள்ளது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11/B மொடர்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1978

ஆங்கிலம் சிறந்த சுலபமான முறையில் திரு. வ. பொன்னம்பலம் M. A. நடாத்துவார். உடன் தொடர்பு கொள்ளவும், NATIONAL INSTITUTES, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1959

## 100 வீடுகள்

[புலோலி]

பருத்தித்துறைத் தேர்தற் தொகுதியிலுள்ள வீடற்றவர்களுக்கு மேலும் 100 வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

வீடமைப்புத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்ட பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் இத்தகவலைத் தெரிவித்தார். [அ]

அத்தனுசியார் பிரதம வைத்தியசாலையின் கிளை
யாழ். நகரில்

இடம்: 109, 3-ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்.

சித்தவைத்தியத்துடன் அக்குப்பங்சர் சிகிச்சையும் அளிக்கப்படும். 1992

VACANCIES

Applications are invited for the following Posts,

1. Office Manager:- Experience not less than Six (6) years.
2. Accounts Clerks:- Experience not less than Three (3) years.
3. Accounts Trainees:- After two years Permanent Jobs guaranteed.

Apply:- TAX AND ACCOUNTING SERVICES
P. O. Box 87, Jaffna 1988

(அமெரிக்க, அண்மைக்கால இலக்கிய வட்டாரத்தில் பிரசித்தி பெற்ற ஆங்கில எழுத்தாளர் உவில்லியம் சரோயன். ஒரு சமயம் தனக்கு இலக்கியத்திற்காக அளிக்கப்பட்ட "புலிட்ஸர்" புலமைப் பரிசை ஏற்க மறுத்து "வியாபாரிகள் கலைகளை ஆதரிக்க அருகதையற்றவர்கள்!" எனக் கூறியவர் இவர். ரஷ்ய நாட்டிலிருந்து குடிபெயர்ந்து அமெரிக்காவில் குடியேறிய ஆர்மீனிய இனத்தவரின் சந்ததியைச் சேர்ந்தவர் பாரிய நாடோடிக் கதையொன்றை தனக்கே உரித்தான பாணியில்கூறி கைவினையின் சிறப்பை அறிவுறுத்துகிறார் சரோயன்.)

# ஆடு மேய்ப்பனின் மகள்!

ஆங்கிலம் மூலம்: உவில்லியம் சரோயன்

தமிழ்: கே. வி. பத்மநாபன்

எனது பாட்டியை ஆண்டவன் ஆசிர்வதிப்பாராக! எனது பாட்டியின் அபிப்பிராயத்தின் படி சகல மக்களும் உடலால் உழைத்தல் வேண்டும். சற்று முன்பதாக உணவு மேசையில் வைத்து. எனக்குச் சொன்னார்! நீ சிறிது கடின வேலை செய்யப்பழகு. மக்களுக்குப் பயன் தரவல்ல, பொருட்களை உதாரணமாக களிமன், மரம், உலோகம் அல்லது துணி ஆகியவற்றினால்செய். ஓர் இளைஞன் ஒரு கௌரவமான கைவினையை அறியாதிருப்பது முறையல்ல. உன்னால் ஒருசாதாரணமேசை, ஒருநாற்காலி, ஒரு சாதாரண தட்டு, ஒரு கம்பளம் அல்லது ஒரு 'காஃபி' பாத்திரம்தானும் செய்யமுடியுமா? உன்னால் செய்யக் கூடியதாக ஏதேனும் உண்டா?

பாட்டி கோபமாக என்னை முறைத்தார்.

அவர் சொன்னார், நீ ஒரு எழுத்தாளன் என்பார்கள். நானும் அப்படியே எண்ணுகிறேன்; நீ சோர்வின்றி அபரிமிதமாகசிகரட்களைப் புகைத்து இந்த முழுவீடும் அந்தப் புகையில் திணறுகிறது ஆனால் நீ புகையைவிடக் கடின பொருட்களைச் செய்யப்பழகியாக வேண்டும்; பார்த்து ஸ்பரிசித்துபயன்படுத்தக்கூடிய பொருட்கள். தொடர்ந்து எனது பாட்டி இந்தக் கதையைச் சொன்னார்.

பாரசியத்தில் ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். இந்த மகன் ஒரு ஆடு மேய்ப்பனின் மகளின்மீது மையல் கொண்டான். தந்தையிடம் சென்று பிரபு நான் ஒரு மேய்ப்பனின் மகளை விரும்புகிறேன். அவளையே எனது மனைவியாகக் கொள்ளவிரும்புகிறேன் என்றான்.

அரசன் கூறினான்: நான் அரசன், எனக்குப் பின்னர் ஆட்சிக்கு வர இருக்கும் நீ எப்படி மேய்ப்பனின் மகளை மணக்கலாம்? அதற்கு மகன், 'பிரபு எனக்குத் தெரியாது: ஆனால் நான் அவளைக் காதலிப்பதையும் அவளையே ராணியாக்க வேண்டும் என்பதையும் மட்டும்தெரிந்துகொண்டுள்ளேன்' என்றான்.

மகனின் காதல் தெய்வீகமானதென அரசன் உணர்ந்து நான் அப்பெண்ணுக்கு ஒரு தூதுஅனுப்புகிறேன் என்றான். ஒரு தூதுவனை அழைத்து எனது மகன் மேய்ப்பனின் மகளைக் காதலித்து மனைவியாக ஏற்றுக்கொள்ள இருப்பதை அவனிடம் சென்றுகூறு' என்றான்! தூதுவன் அப்பெண்ணிடம் சென்று, அரசரின் மகன் உன்னைக் காதலித்து மனைவியாக்க விரும்புகிறார், என்றான். அதற்குப்பெண் என்ன கைத்தொழில் செய்கிறார் அவர்? என வினவினாள். தூதுவன் கூறினான், அவர் அரசரின் மைந்தனல்லவா, எனவே கைத்தொழில் எதுவும் செய்வதில்லை', என்று.

'கைத்தொழில் ஏதேனும் பழகிக்கொள்ள வேண்டும்', என்று கூறி தூதுவனை அனுப்பிவிட்டாள் அவள். தூதுவனும் அரசனிடம் மீண்டு, மேய்ப்பனின் மகள் கூறியவற்றைத் தெரிவித்தான்.

அரசன் மகனிடம், அந்த மேய்ப்பனின் மகள் உன்னை கைவினை பழகும்படி கூறுகிறாள். இதன்பிறகும் நீ அவளை மனைவியாக்க எண்ணுகிறாயா? என்று கேட்டான். அதற்கு மகன் 'ஆம், நான் புற்கம்பளம் நெசவு செய்யப் பழகப் போகிறேன்' என்றான்.எனவே மைந்தனுக்கு புற்கம்பளம் நெசவு செய்வதற்கான பயிற்சியளிக்கப்பட்டது. பற்பல வர்ணத்திலும், கோலங்களிலும் அழகிய கம்பளங்களை தயாரிக்க மூன்று நாட்களில் தேர்ந்துவிட்ட அரசகுமாரனது கம்பளங்களைத் தூதுவன் மேய்ப்பனின் மகளிடம் எடுத்துச் சென்று, இப்புற்கம்பளங்கள் அரசரின் மகன் தயாரித்தவை எனக் கூறினான்.

இதன்பேரில் பெண் தூதுவனுடன் அரசனின் அரண்மனைக்குச் சென்று அரசகுமாரனின் மனைவியானாள்.

—எனது பாட்டி கதையைத் தொடர்கிறாள்.

ஒருநாள் அந்த அரசகுமாரன் பாக்தாத் நகர வீதிகள் வழியே செல்லும்போது ஓர் உணவுச்சாலையை அடைந்தான், அவ்விடம் பரிசுத்தமாகவும் குளுமையாகவும் இருக்கவே உட்சென்று ஒரு மேசையருகே அமர்ந்தான்.

அந்தஇடத்தைப்பற்றிஎனது பாட்டி கூறியதாவது: "அது கொள்ளையரும். கொலைஞரும் தங்குமிடம். அவர்கள் அங்கு இருந்த ஒரு பாதாள அறையில் அரசகுமாரனைச் சிறைப்படுத்திவிட்டார்கள். அந்தக் கொலைகாரர் கூட்டம் அந்த நகரத்தின் பல பெரியமனிதர்களை சிறையிட்டு தமது கேளிக்கைக்காக அவர்களில் மிகப் பருத்த மனிதனைக் கொன்று மிக்க மெலிந்தவனுக்கு விருந்து வைப்பது வழக்கம் அரசகுமாரன் மிகமெலிந்தவனாதலாலும் அவன் யார் என்பது தெரிந்திராததாலும் அவன் உயிர் பிழைத்திருந்தான் தவிர மிகவும் விலைமதிப்புள்ள புற்கம்பளங்களை நெசவுசெய்பவன் நான் என அக்கூட்டத்தினருக்கு சொல்லியிருந்தான். ஆகவே அவர்கள் அவனுக்கு புல்கொணர்ந்து கொடுத்து நெசவுசெய்யச் சொல்லவே மூன்று நாட்களில் மூன்று கம்பளங்களை தயாரித்து, இவற்றைப் பாரசீயர்களின் அரசனது அரண்மனைக்கு எடுத்துச் சென்றீர்களானால் அவன் ஒவ்வொரு கம்பளத்திற்கும் நூறு பவுண் நாணயங்கள் தருவான் என்று சொன்னான். எனவே அரண்மனைக்கு கொண்டுசெல்லப்பட்ட கம்பளங்களை அரசன் பார்த்ததும் அவை! தனது மகனது கைப்பணி என்று உணர்ந்து அவற்றை மேய்ப்பனின் மகளிடம் எடுத்துச் சென்று, இக்கம்பளங்கள் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன; ஆனாலும் இவை எனது காணாமற்போன மகனின் கைப்பணி என்றான். அந்த மேய்ப்பனின் மகளும் ஒவ்வொரு கம்பளத்தையும் அண்மையில் உற்றுப்பார்த்து ஒவ்வொருகம்பளத்தில்இழைத்திருந்த கோலங்களிலும் பாரசிக மொழியில் தனது கணவனது ஒரு சேதி எழுதப்பட்டிருந்ததைக் கண்டு அரசனுக்கு விவரித்தாள்.



உடனே அந்த அரசன் பல போர்வீரர்களை அந்தக் கொள்ளையர்-கொலைஞர்களது இடத்திற்கு அனுப்பி சிறைப்பட்டிருந்த யாவரையும் மீட்டு துட்டர்களைக்கொன்று முடித்து அரசகுமாரனையும் பத்திரமாக அரண்மனைக்கு அவனது மனைவியான அந்த எளிய மேய்ப்பனின் மகளிடம் சேர்ப்பித்தான். அந்த மகன் அரண்மனை சேர்ந்து தனது மனைவியை மீண்டும் பார்த்ததும் பணிந்து அவளது பாதங்களை அணைத்து. 'என் அன்பே உன்னால் அல்லவா நான் உயிரோடு இருக்கிறேன்' எனக் கூறிய போது அரசன் அந்த மேய்ப்பன் மகளின் சாமர்த்தியம் குறித்து மிகவும் பெருமிதம் அடைந்தான்,

இப்போது புரிகிறதா, ஏன் ஒவ்வொரு மனிதனும் ஒரு கௌரவமான கைவினை பயில வேண்டும் என்று? என எனது பாட்டி கேட்டாள்.

எனக்கு மிக துல்லியமாகப் புரிகிறது; ஒரு கைவாள் ஒரு சுத்தியல் மற்றும் ஒரு பல கைத்துண்டு ஆகியவற்றை வாங்குவதற்கு போதிய பணம் சம்பாதித்த உடன் நான் தீவிரமாக உழைத்து ஒரு எளிய நாற்காலியோ அல்லது புத்தகங்கள் வைப்பதற்கு ஒரு தட்டோசெய்துகொள்ளுவேன் என்று சொன்னேன்,

# 1977 நோபல் பரிசு பெற்ற உலக மன்னிப்புச் சபை

எஸ். பி. கிருஷ்ணன்

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் மனித உரிமைகள் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப் பட்டதிலிருந்து அதன் நோக்கங்களைச் செயல்படுத்த பல நாடுகளிலும் பலநிரந்தரமான சக்திகள்போராடிவந்துள்ளன. அதேவேளையில் பயங்கரமும், படுகொலையும், மிருகத்தனமும், வன்முறையும் பெருகிக் கொண்டே வந்துள்ளன.

இந்நிலையிலும்கூட பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டனில், பீட்டர் பெனக்சன் என்பவரால் தொடக்கிவைக்கப்பட்ட அகில உலக மன்னிப்புச்சபை என்ற மன்றத்திற்கு 1977-ம் ஆண்டிற்கான நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டிருக்கின்றது.

உலகெங்குமுள்ள அரசியல் கைதிகளை 'மனிதர்களாக' மதித்து நடத்தக்கோரியும், அவர்களின் விடுதலைக்காகப் போராடியும், அவர்களுக்குச் சாதகமாக பொதுசன நல்லெண்ணத்தைத் திரட்டும் வகையிலும் இந்த மன்றம் செயல்பட்டுவருகின்றது.

"மனிதப் பெறுமதியைப் பாதுகாக்கவும், உலக சமாதானத்திற்காக உழைத்தும் தன் சக்தியைச்செலவிட்டது மன்னிப்புச்சபை" என்று நோபல் பரிசுக் குழுவினால் விதந்துரைக்கப்பட்ட இம் மன்றத்தின் தலைமையகம் இலண்டனில் இருக்கின்றது. இதன் கிளைகள் 35 நாடுகளில் உள்ளன. பல நாட்டுத் தொடர்பும், பிரச்சாரத்திட்டங்களும் உள்ளன.

'அரசியல் கைதிகள்' என்பதற்குப் பதிலாக 'மனச்சாட்சியின் கைதிகள்' என்ற பதத்தையே அவர்கள் விரும்பிப் பயன்படுத்துகிறார்கள். அரசியல் கைதிகள் உண்மையில் அரசியல் காரணமாக, மதம் காரணமாக, இன எழுச்சி காரணமாக சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்பலாத்காரத்தை விரும்புவதில்லை. இக்கைதிகள் சித்திரவதை செய்யப்படுவதை, மரண தண்டனை அடைவதை நிறுத்தவும் மன்னிப்புச்சபை போராடுகின்றது.

வெவ்வேறு அரசியல் சித்தாந்தங்களைக்கொண்ட நாடுகள், தங்கள் அரசியல் எதிரிகளை சிறைவைப்பதாக, சுலபமான, வசதியான செயலாக கொண்டுள்ள அதேவேளையில் தம் நாட்டு மக்கள் யாவரினதும் உரிமையும் சுதந்திரமும் மதிக்கப்படுவதாகவும்சொல்லுகின்றன மனிதனை வதைக்கும் செயற்பாடுகளோ குறைவதாகக் காணவில்லை

ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் மனித உரிமைப் பிரச்னை இன்றுள்ளதுபோல முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை இன்று இவை இரண்டும் முக்கிய பிரச்னைகள் மனித உரிமை தர்ட்பிரயோகங்களை பிரபலப்படுத்தும் மன்னிப்புச்சபை போன்ற எதிர்ப்புச்சக்திகள்தான் இதற்குக் காரணம். மனித உரிமைகளை அமெரிக்க அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அம்சமாகவிருப்பது மற்றொரு காரணம். கொள்கை மாறுபாட்டால் சிலர் இதனை ஏற்றுக்கொள்ளாவிடினும் அவர்களால் போதிய பிரசாரம் கிடைக்கிறதுஎன்பதுஉண்மை.

மன்னிப்புச்சபையின் இலண்டன் பணிமனையில் இத்துறையில்ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நூறு அலுவலர்கள் கடமையாற்றுகிறார்கள் மனிதஉரிமை மீறல் நடவடிக்கை பற்றிய செய்திகளை சேகரிப்பதும், அவற்றை நிரைப்படுத்தலும் அரசியல் காரணங்களுக்காக சிறைவைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரினதும் சார்பில் 'பைல்'களை வைத்து அவர்கள் வரலாற்றை ஆராய்வதும் அவர்களின் பணியாகவுள்ளது

அரசியல் கைதிகளின் மனோபலத்தை மாசுபடுத்தல் விசாரணையின்றி தடுப்புக்காவலில் வைத்தல் அல்லது கொலை செய்தல் சித்திரவதைசெய்தல் ஆகியன அவர்கள் கவனத்தை ஈர்க்கும் முக்கிய பிரச்னைகள்.

சிறைக்கூடங்களில் ஒவ்வொரு அரசியல் கைதியும் நடத்தப்படும்விதம்பற்றி அவர்களுக்குத் தெரியும் சிறை அதிகாரிகளுடனும் அரசாங்கத்துடனும் அவர்கள் தொடர்புகொள்கிறார்கள் அநீதியைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

உலக மன்னிப்புச்சபை கடந்த 16 ஆண்டுகளில் பத்தாயிரத்திற்கு மேலான அரசியல் கைதிகளை விடுவிக்கும் பணியில் ஈடுபட்டது என்றாலும் மன்னிப்புச்சபையின் முயற்சியால்தான் அவர்கள் விடுதலைபெற்றார்கள் என்பதை பல அரசுகள் ஏற்றுக்கொள்வதில்லை

உலகெங்குமுள்ள 180,000 உறுப்பினர்களின் நன்கொடை உதவியைக்கொண்டு இயங்கும் மன்னிப்புச்சபை, உலகெங்கும் இலட்சக்கணக்கான அரசியல் கைதிகள் இருப்பினும் ஒரே வேளையில் சுமார் 6000 கைதிகளின்பிரச்னைகளை மாத்திரம் கையாளமுடிகிறதாம்.

## ஆனந்திக்கு பாராட்டு

சென்ற 4-3 79 ஈழநாட்டில் பிரசுரமாகியிருந்த சிறுகதை என்னை மிகவும் கவர்ந்தது மிக அழகான வசனங்களால் கதையைக்கொண்டுசென்றிருந்த 'ஆனந்தி'யின் திறமைக்கு என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவியுங்கள் சமீப காலத்தில் ஈழநாடு பிரசுரித்த கதைகளில் இந்த "வழிபாடு" மிகச் சிறந்த கதையென்று என் ரசனைக்குத் தோன்றுகிறது

கோகிலா மகேந்திரன்

விழிசிட்டி

## சீர்கெட்ட சினிமா!

சீர்கெட்ட சினிமாவால்
சீரழிந்தார் எம்குலத்தார்
மழையென்ன?
குளிரென்ன?
உயிர் வாட்டும் வெய்யி
லென்ன?
ஒன்றிற்கும் கலங்கமாட்டார்,
ஆனாலும் ஒரு மாற்றம்;
அடிவேண்டா நாயகனமேல்
வில்லன் கைபட்டுவிட்டால்
பதைபதைத்துக் கண்கலங்கி
மெய்மறந்து கத்திடுவார்!
சொன்னாலே வெட்கந்தான்!
சொல்லாவிட்டால்
துக்கந்தான்!

-திருமதி இந்திரா கணேஷ்

## இலக்கியத்துறையில் இளைய தலைமுறை - 9

# சீதனம், சாதி இரண்டையும் விட்டால் எழுதுவதற்கு வேறில்லையா?

### காவலூர் எஸ். ஜெகநாதன்

முன்னொரு காலத்திலே இளங்கீரன் நடாத்திய மரகதம் இதழில் ஒரு கட்டுரை; 'ஒட்டிப்பிறவாத இரட்டையர்கள்' என்பது தலைப்பு. சில்லையூர் செல்வராசனையும் காவலூர் இராசதுரையையும் பற்றி நன்றாகவே எழுதியிருந்தார்கள். 'காவலூரர்' என்ற பெயரை இலக்கியத்துறையிலே 'புழங்க' விட்டிருப்பவர் இராசதுரை என்றுகுறிப்பிடப் பட்டிருந்தது

அதே வேளையில் வலிவும் பொலிவும் மிக்க புதிய தலைமுறையினர் புது இரத்தம் பாய்ச்சுவதால்தான் காலமெல்லாம் இளமை பொலிகிறது. இலக்கியத்துறையிலே காவலூரைத் தொடர்ந்து பொறிக்க வேண்டி 1970ம் ஆண்டளவில் காவலூர் ஞானேந்திரன் எழுதத் தொடங்கினார்.

திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தகப்பனாகிவிட்ட பின்னும் அவரது முகத்தில் குழந்தைத்தனம் மாறாமல் அப்படியே இருக்கிறதேயென்று நான் காணும்தோறும் வியப்பதுண்டு. அப்பழுக்கில்லாத வெள்ளை உள்ளம். எவ்வளவு தான் ஆத்திரத்தை உண்டு பண்ணக்கூடிய சந்தர்ப்பங்களை நேரும்போதும், அவர் கோபப்பட்டு நான் கண்டதில்லை. இலக்கியமென்று வந்துவிட்டால் மணிக்கணக்காக அவர் பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்க வேண்டுமே.

ஞானேந்திரனின் கதைகளின் முதல் ரசிகன் அவரது தந்தையார்தான். இந்தத் துறையில் ஊக்கப்படுத்தி வருபவரும் அவரே. ஆங்கில ஆசிரியராக இருந்த தந்தையார், இவருக்கு ஆங்கில அறிவைப் புகட்டி மேல்நாட்டு இலக்கியங்களிலே ஈடுபாடுகொள்ளவைத்தார்.

''திரும்பத்திரும்ப சாதியையும், சீதனத்தையுமே எழுதிக்கொண்டிருந்தால் வாசகர்களுக்குச் சலிப்பு ஏற்படாதா?'' என்று என்னைக் காணும்போதெல்லாம் கேட்பார். ''உண்மைதான்; அவற்றைத் தவிர்த்து நீங்கள் எழுதுங்களேன்'' என்றால், பத்திரிகைக்காரர்களும் சாதியும், சீதனமும்தான் தேவை என்கிறார்கள். இந்திய எழுத்தாளர்களுடன் போட்டியிட வேண்டுமென்றால் உள்ளடக்கத்திலே புதுமைகளைப் புகுத்தவேண்டும் என்கிறார்.

கொழும்பிலே ஒரு தமிழ்க் குடும்பம். குடும்பத்தின் தலைவி வகுப்புத்துவேசம் பிடித்தவள். சிங்களவர் என்றாலே கண்ணில் காட்டக்கூடாது. (கொழும்பிலிருந்து கொண்டே) சிங்கள வாலிபன் ஒருவன் வாடகைக்கு அறை கேட்டு வருகிறான். வந்தவன் சிங்களவன் என்பதற்காக வீட்டுக்காரி அறை கொடுக்க மறுக்கிறாள். அந்த நேரத்திலே நேர்முகப்பரீட்சைக்கு ஒரு கடிதம் வருகிறது சிங்களத்தில். ''தம்பியை உள்ளுக்கை கூப்படுங்களன். அவருக்கில்லாததறா மா?'' தமிழ் வெறி பிடித்தவளின் சந்தர்ப்பவாதத்தை புட்டுக்காட்டுகிறார் ஞானேந்திரன். 'சந்தர்ப்பவாதம்' என்ற கதையில். நீர்ப்பாசனத் திணைக்களப் பண்பாட்டுக்கழகப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற கதை இது.

இவரது முழுப்பெயர் ஜேம்ஸ் ஞானேந்திரன். சீ-நோர் தொழிற்சாலையின் கொழும்புக்கிளையில் பணியாற்றுகிறார். இதுவரை பதினைந்துக்கு மேற்பட்ட கதைகளை எழுதியிருக்கும் இவரது கதைகளில் பலவற்றை 'ஈழநாடு' வாரமலரே வெளியிட்டது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த 'ஒருசாண் வயிறு' என்ற கதை இவருக்கு இலக்கியத் துறையில் நல்ல கவனிப்பைப் பெற்றுக் கொடுத்தது. தான் எழுதியவற்றுள் தனக்கு மிகவும் பிடித்த சிறுகதையென்றும் இதையே கூறுகின்றார்.

இரயில் ஓடிக்கொண்டிருக்கிறது. பத்துப்பேருக்குப் போதுமான உணவை இரண்டு பேர் வைத்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரயில் நிலையம் ஒன்றிலே ஒரு பிச்சைக்காரக் குடும்பம் வீசப்பட்ட எச்சில் சோற்றுக்காகப் போராடுகிறது. இதனைச் சித்தரிப்பதுதான் 'ஒரு சாண் வயிறு' கதை.

சமுதாயத்திலே, தான் காணும் முரண்பாடுகளை வாசகன் உள்ளத்திலே தைக்கும்படி விபரிப்பதில் கெட்டிக்காரர். யாழ் தொழில்நுட்ப நிறுவனத்திலே படிக்கும்போது வணிகமன்றம் நடத்திய சிறுகதைப்போட்டியில் இரண்டாவது பரிசையும், சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழா போட்டியில் தனிநாயகம் அடிகளாரிடமிருந்து இரண்டாவது பரிசையும் இவரது கதைகள் பெற்றுள்ளன.

ஞானேந்திரன், சிறுகதைகளை மட்டுமல்லாமல் இரு நெடுங்கதைகளையும் எழுதியிருக்கிறார். சமூகத்திலே கொள்ளிவால் பேய்களாகி விட்ட சில ஆண்களால் அவலப்படும் வனஜாவின் கதைதான் வனஜா. 'பாதைகள்' கதை மற்றையது. மித்திரன் வாரமலரிலே வெளிவந்த தொடர்கதை இவரது இலக்கியப் பாதையையே திசைமாற வைத்துவிட்டதோ என்றுதான் பயப்படவைத்தது. சமூகப் பிரச்னைகளின் மீது ஆழமான பார்வையுடைய இவர் ஏதோ பொழுதைப் போக்கவென்று எழுத முற்பட்டுள்ளது விசனத்தைத் தந்தாலும் அவர் கூறும் 'புதுமை' இதுதானோ என்னவோ,

இவர் ஒரு பலசரக்கு முதலாளி. உலகத்தின் பலபாகங்களிலுமுள்ள புதுமைகள், விநோதங்கள், அசாதாரணமான செய்திகள் இவற்றையெல்லாம் தேடித்தேடி அறிந்து 'பல சரக்குகள்' என்ற தலைப்பில் கலாவல்லியில் இவர் எழுதிய தொடர் மறக்க முடியாதது. பயனுள்ள பலசரக்குகள் தான். ஈழநாடு வாரமலரில் இவர் அடிக்கடி எழுதிய கிரிக்கட் விமர்சனங்களும் வாசகர்களின் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

ஊர்காவற்றுறையிலே பிறந்துவளர்ந்த இவர் உடுவிலே காதல் மணம் புரிந்த போது காவலூரரைக்கைவிட்டு விடுவாரோ என்று நான் பயந்ததுண்டு. பயந்தமாதிரி ஆகிவிடவில்லை, காவலூரர் ஞானு ஆகி திருமணக்களிப்பு ஓய்ந்தபின் எழுதத்தொடங்கியிருக்கிறார். அண்மையில் அவரோடு ஒன்றாகவே மெயில் றெயிலில் பயணம்செய்த போது தூக்கத்தை மறந்து 'இலக்கியம்' பற்றியே கதைத்துக்கொண்டுவந்தார்.

''என்ன ஞானு நல்லாகவே நாலைந்துகதை எழுதினீங்க. இப்ப உண்மைக்கதை அது இது என்று 'செக்ஸ்' ஆக எழுதிறீங்க'' இது எனது சலிப்பு.

''பிரச்சனை, பிரச்சனை என்று எழுதினால் சலிப்பு ஏற்படாதா'' அவரும் சலிப்பையே துணைக்குஅழைக்கிறார்.

''அதுக்காக......''

''புதுமையா ஏதாவது எழுதலாமென்றுதான்''.

நான் சிரிக்கிறேன். ''உங்களிடமிருந்து நல்ல தரமான கதைகளை எதிர்பார்க்கும் எங்களை ஏமாற்றப் போகிறீர்களா? ' என்று கேட்கிறேன்.

''முயற்சிக்கிறேன்''.

அவரது முகமாற்றத்திலும் வார்த்தையில் தொனித்த உறுதியிலும் எனக்கு நம்பிக்கை. அவரிடமிருந்து தரமான படைப்புகளை எதிர் பார்க்கலாம்.

எழுதத் தெரிந்தவர்கள் தொடர்ந்து எழுதவேண்டும். அது அவர்களது சமூகக் கடமை. அந்தக் கடமையிலிலிருந்து தவறக்கூடாது பிரசுர வாய்ப்புகள் ஈழத்தில் மிகவும் குறைவு. அதனால் நம்பிக்கையை இழந்து தளர்ந்துவிடக் கூடாது. உயர்வை நாடி ஓய்வின்றி உழைக்க வேண்டும். எழுத்துத்துறைக்கு தொடர்ந்த பயிற்சி, மனம் தளராமை மிகவும்அவசியம். எதிர்காலத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்கப்போகும் இலக்கியத் துறையின் நுழைவாயிலில் நிற்பவர்களுக்காகவே கூறுகிறேன்.

காவலூர் ஞானேந்திரன் இனி ஆரோக்கியமான திசை வழியில் எழுதுவாரென எதிர் பார்ப்போம்.

---

# குடற்புண்

உலகத்திலேயே எமது தேசத்திலும் தென்னிந்தியாவிலும்தான் குடற்புண் அதிகமாக ஏற்படுகிறது. காலநிலையும் இதற்கு ஒரு காரணமாகின்றது. வெப்பகாலத்தில் இந் நோய் அதிகரிக்கின்றது.

உணவை நன்கு மென்று சாப்பிடாது விழுங்குவதாலும், வேளைதவறிச் சாப்பிடுவது, மிகவும் கூடச்சாப்பிடுவது, காரமான உணவு, புகைபிடிப்பது, அளவுக்கதிகமாகக் காப்பி-தேநீர், மது அருந்துவதாலும், நாட்பட்ட வயிற்றுளைவு, சீதபேதி போன்ற நோய்களினாலும், உடலிலே சக்தி குறைவாக இருப்பதாலும் குடற்புண் ஏற்படலாம். மேலும் பசியை அடக்குவதாலும் உண்டாகலாம். பெரும்பாலும் வயிற்றின் மேற்பகுதியிலுள்ள விதானத்தில் இது ஏற்படுகின்றது.

சீரணத்துக்கு உதவும் அமிலம் அதிகளவில் சுரப்பதால் அல்லது அவ் அமிலத்தைச் சுரக்கும் அணுக்கள் உற்பத்தி கூடுவதால் வயிற்றிலுள்ள மென்படலம் (tissues) பாதிக்கப்படுகின்றன இரைப்பையில் செல்லும் உணவு முழுவதும் சீரணிக்கப்படாது. பாதிக்கப்பட்ட சவ்வில் காயமேற்படுகிறது. அன்றேல் அதற்கு ஊட்டமளிக்கும் குருதிக்குழாய் பழுதாகி வலுவற்றிருக்கும். அப்போது குடற்புண் தோன்றலாம்.

குருதியில் 'ஓ' பிரிவு உள்ளவர்களுக்கு இது அதிகம் ஏற்படுகிறது. மனக்கவலையும், பதட்டமும் குடற்புண்ணை அதிகரிக்கச்செய்கின்றன.

இவ்வியாதியில் அடிவயிற்றின் மேற்பகுதியில் எரிச்சலுடன் கூடியவலியை உணரலாம். உணவு உண்டவுடன் குறைந்து, உணவு சீரணிக்கப் பட்டவுடன் திரும்பவும் வலி தோன்றும் இந்த வயிற்றுவலி முதுகுவரை பரவக்கூடும். இப்படியாகத் தொடங்கி இவ் வலி இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருதரம் வரத்தொடங்கும் எவ் உணவை உட்கொண்டாலும் வாந்தி எடுக்கும். மேலும் ஏப்பம், மார்பு எரிச்சல், காலையில் எழுந்திருக்கும்போதே நாவறட்சி போன்றவையும் தோன்றலாம். நாளடைவில் புண்முற்றி இரத்தவாந்தியும் ஏற்படலாம்.

எனவே ஆரம்பத்திலேயே தகுந்த சிகிச்சையைப் பெற வேண்டும். மருந்துகளுக்குக் குணமாகாவிடில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள நேரிடும்.

### ஒவ்வாத உணவு

எவ்வகை உணவு உங்களுக்கு ஒத்துவரவில்லையோ அவற்றைத் தவிர்க்கவேண்டும். காரமான உணவு, சீரணிக்காத உணவு, கடும்சூடான உணவு, காப்பி, புகை, மது ஆகியவற்றை விலக்கவேண்டும். உரிய மருந்துகளையும் நல்ல உணவையும் உட்கொண்டால் நல்ல குணம் பெறலாம். உணவை நிதானமாகவும் மென்றும் சாப்பிடவேண்டும். கஞ்சி, வாழைப்பழம், பப்பாளிப்பழம் போன்றவை நன்று இரவில் நல்ல தூக்கமும், பகலில் உணவின்பின் சிறிது ஓய்வும், புரதச்சத்துள்ள உணவும் ஆரம்பநிலையிலேயே வைத்தியம் செய்வதும் அறுவைச் சிகிச்சையிலிருந்து காப்பாற்றும்.

டாக்டர்!

இந்திரா தர்மலிங்கம்

---

# கலட்டுத்தரை பற்றிய எனது ஆய்வுரை

### முத்து இராசரத்தினம்

''இறந்தகாலத்தின் சுவடுகள் கண்டு, நிகழ்காலத்தின் விரிகளத்தில் நின்று, எதிர்காலத்தின் பசுமையைச் சிருஷ்டிக்கும் வீச்சு இன்றி எய்யப்படும் எக்கருத்துக்களும் கிரஞ்சீவித்துவம் பெறமுடியாது''

'எழுத்தாளன் எனப்பெயர் பெறவேண்டும் என்கின்ற நோக்கத்திற்காக ஏனோதானோ வெனவும், முன்னுக்குப்பின் முரணாகவும், நம்பகத்தன்மையின்றியும், நபும்சகமாகவும், சுவையின்றியும் வாசகனை வலிந்திழுத்து 'நானே அறிஞன்' எனப் பறைசாற்றும் பாணியில் சொந்தக்கருத்தைதிணிக்க முயன்றும் உருவாக்கும் படைப்புக்கள் செழிப்பானதல்ல '

''இன்று அறிவு எல்லோரிடமும் பரந்திருக்கிறது. எமக்கு அறிவு புகட்ட எழுத்தாளனுக்கு என்ன அருகதையிருக்கிறது?''

'சில மணித்தியாலங்கள் சுவையாகக் கழிக்கவேண்டும். எம்மைத் திணறடிக்காமல் எளிமையானதும் ஜீரணிக்கக்கூடியதுமான எழுத்துக்களே எமக்கு ஆறுதலளிக்கவல்லன. அத்தகைய உருவாக்கங்களையே எமக்குத் தரவேண்டும்.'

இத்தகைய கருத்துக்களே இன்றைய இலக்கிய இரசனையாளர்களிடமிருந்து எமக்குக் கிடைக்கின்றன. அவர்களைத் திருப்திப்படுத்த காவலூர் எஸ். ஜெகநாதனின் 'கலட்டுத்தரை' எந்தக்கோணத்தில் முயல்கின்றது?

எமது படைப்புக்களுக்குப் பணம் கொடுப்பவன், அவற்றின் தரத்தை எடைபோடுகிறான். ஆகவே, அவனுடைய நியாயமான உணர்வுகளுக்கு மதிப்பளித்து நாம் எழுத வேண்டும். அப்படிநாம் எழுதிய படைப்புக்கள் அரங்கேறாமல் குப்பைக்கூடைக்குள் செல்லுமாக இருந்தால் நாம் எவ்வளவு வெதும்புகின்றோம்?

ஆகையால், எழுதுபவன் வாழவேண்டும். அதற்காக அவன் சமூக ஆரோக்கியத்தைச் சிதைக்கக்கூடாது

பணத்துக்காக எழுதுபவன் எதையும் எழுதவேண்டும் என்று வாசகர்கள் வற்புறுத்துகின்றார்களா?

ஒவ்வொரு சிறந்த கலைஞரதும் உயர்ந்த படைப்புக்களைத் தேடிவாங்கும் இரசிகர்களை உருவாக்க நாம் சரியானவற்றை, உண்மையானவற்றை, நேர்மையுடன், நெஞ்சுரத்துடன் எழுதுவதுமட்டுமல்ல அவற்றை வெளிக்கொணர்ந்தேயாகவேண்டும்.

அதற்கு—?

எமது வயிற்றை, வாழ்க்கையை, வசதிகளை வஞ்சித்து எமது ஆக்கங்களை நாம் வெளியிட்டு அதற்குரிய பலன்களை நாம் பெற்றுக்கொள்ளாவிட்டால்...... எம்மை நாமே தேற்றுவதற்குக்கூட எமக்கு ஓர் அபூர்வசக்திதான் அநுகூலமாக வேண்டும். இவற்றை நண்பர் காவலூர் எஸ். ஜெகநாதனும் உணர்ந்திருப்பார்.

இலங்கை எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை வெளியிட்டு, அவற்றைச் சந்தைப்படுத்த எத்தகைய சிரமங்களுக்குள் எல்லாம் ஈடாடுகிறார்கள் என்பது எவருக்குத்தான் தெரியாது?

அதற்குள்ளும் எவ்வளவு போட்டி!

டணம் வேண்டும்.

அந்த உண்மையான உழைப்புக்குரிய ஊதியத்தைப்பெறவே எழுதவேண்டும். இதுவே நான் 19-11-77 சனிக்கிழமை யாழ். வளாக இராமநாதன் மண்டபத்தில் நடைபெற்ற 'கலட்டுத்தரை' ஆய்வரங்கில் குறிப்பிட்ட கருத்தென்பதை சகோதரி செல்வி மாலினி கந்தசாமி அவர்கள், நண்பர் காவலூர் எஸ். ஜெகநாதனுக்கு இடித்துரைப்பார் என்பதில் எனக்கு அணுவளவேனும் சந்தேகம் கிடையாது.

நண்பர் சிவசக்தியை அறிமுகப்படுத்தமுயலும்பொழுதே என்னையும் தனது வாசகர்

(9-ம் பக்கம் பார்க்க)

# உணவு போஷாக்கு பற்சிதைவு



## டாக்டர் கே. நித்தியானந்தன்

போஷணை பற்றிய விஞ்ஞானம் என்பது உடம்பின் வளர்ச்சி, பாதுகாப்பு, திருத்தம் என்பவற்றைப் பற்றிக் கற்றலாகும், அது உணவிலே தங்கியுள்ளது.

உணவு என்பது தனிப்பட்ட ஒருவரால் அல்லது தனித்தனி பலரால் சாதாரணமாக உண்ணப்படும் உணவே ஆகும். விசேட உணவுகள் என்பது சலரோகம், தொளதொளப்பான பருத்த தோற்றம் போன்ற நோயுடையவர்களாலும், தாவர உணவு போன்ற விசேட உணவுகள் குறிப்பிட்ட சில நம்பிக்கையுடையவர்களாலும் உண்ணப்படுவதாகும்,

சிறந்த போஷாக்குள்ள உணவு ஒவ்வொருவருக்கும் தேவைப்படுகின்ற தகுந்த அளவாக உள்ள எல்லாச் சத்துக்களையும் அடக்கியதாகும். எவ்வாறயினும் மக்களிற் சிலர் தாங்கள் போதியளவு புரதச் சத்துள்ள உணவை உண்டமை பற்றியறிதற்கு அவ்வுணவைப் பரிசிலனை செய்கின்றனர். அந்தப் புரதச் சத்து உணவு தகுந்த அளவுள்ள அமினோ அசிட்ஸ், 14 பிரதான விட்டமின்கள், 13 வகை கனிப் பொருட் சத்து உப்புக்கள். கொழுப்புத் தன்மையுடைய அசிட்ஸ். போதியளவு கலோரி என்பன சேர்ந்து உடலின் சக்தித் தேவைக்கு உதவுகின்றன. சாதாரண மனிதன், தன்பசியைத் தீர்ப்பதற்காக விதம் விதமான உணவுகளை உட்கொண்டு தன்னுடலைச் சுகமாக வைத்திருக்கின்முன் ஆனல் போஷணை உணவு பற்றி அறிந்து கொள்ளுதல், உணவைத் திருப்திப்படுத்தும் முறையை அறிந்து கொள்வதை மிக இலகுவாக்கும், இது சுகத்தை அதிகரிப்பதற்கு உதவுவதோடு தொற்று நோய் பரவாமற் பாதுகாத்தற்கும் துணைபுரியும். உதாரணமாக இளம் வயதில் சத்துள்ள உணவை உண்ணுதல் பெலமான, சுத்தமான பற்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் உள்ளது பற்கள் விதவிதமான உணவுகளை உண்பதற்கு துணை புரிவதோடு கடின பதார்த்தங்களைத் துண்டுதுண்டாகக் கடித்துச் சீரணிக்கச் செய்வதற்கும் துணை புரிகின்றன.

### உணவில் போஷணையும் அதன் தொழிற்பாடும்

சக்தி: கொழுப்பு, காபோகைதரேற்று, புரதம்.

புரதம்: உடலின் உட்பிரவல் ஆக்கத்தின் வளர்ச்சியும் பாதுகாப்பும், கனிப்பொருட் சத்து.

கனிப் பொருட்சத்து; உடற் கிரமத்தின் ஒழுங்கு, நீர், விற்றமின்கள்.

முக்கிய போஷணை உணவு புரதச்சத்து, கொழுப்பு காபோகைதரேற்று என்பவற்றைக் கொண்டதாகும். புரதச் சத்து ஒவ்வொருவருடைய உயிரணுக்களும் தோற்றமாவதற்குத் தேவையாகும். புரதம் இளம் வயதில் பற்கள் பெலமடைவதற்குத் தேவையானது.

### போஷணையும் பற்சிதைவும்

உணவுக்கும் பற்களுக்குமுள்ள தொடர்பு பற்சிதைவு விருத்திக்கு மிக முக்கியமானது. பற்சிதைவுக்கு காபோகைதரேற்றின் பாவன எத்தகையது என்பது சுவீடனிலுள்ள வைத்திய நிபுணரால் ஆராய்ச்சி செய்யப்பட்டது. அவரது ஆராய்ச்சி முடிவு பின்வருமாறு;-

(1) அதிகளவு சீனியை உபயோகித்ததால் பற்சிதைவு அதிகரித்தது.

(2) அடிக்கடி சீனி உணவு உண்ணுவதால் பற்சிதைவு கூடுகிறது.

(3) குளுகோஸ் நீரை உட்கொள்ளுதல் நீண்டநேரம் பற்களுடன் ஒட்டிக்கொண்டிருக்கும்பண்டங்களிலுள்ள காபோகைதரேற்றிலும் குறைந்த தீமை உடையது எவ்வாறயினும் இத்தகைய மாச்சத்துள்ள உணவு கொழுப்புச்சத்துடன் சேரும்போது அதனியல்பு குறைகிறது.

இறுதியாக ஒட்டுந்தன்மையுள்ளமிகுந்த காபோகைதரேற்று உணவுகளான இனிப்புக்கள் போன்றவை பற்சிதைவுக்கு ஏதுவாகின்றன. சிறந்த உணவின் உபயோகமும் அதன்பயனும் வயதுண்டாக பற்களின்சுகத்தின் மூலம் காணப்படும்.

---

# தசாம்ச எண்சோதிடத்தில் உங்கள் வார பலன்

25-3-1979முதல் 31-3-1979 வரையுமுள்ள காலபலன்கள்.

இப்பலன்கள் பிறந்ததேதி எண்ணை (அதிர்ஷ்டஎண்) கொண்டே பார்க்கவேண்டியது. ஆண்டு, மாதம், தேதி மூன்றையும் கூட்டிய கூட்டெண்ணுக்கும் (விதிஎண்) பொருந்தும் பெயரெண், மற்றும் எண்களும் சரிவர அமையுமானல் இப்பலன்கள் கூடுதலாகவே அமையும்.

இவ்வாரத்துக்குரிய பூர்வ ஜென்மத்தொடர்பு எண்-7, விதி எண்-9. அதிர்ஷ்டஎண்-7 வாழ் எண்-9, வினைஎண்-3, நியதி எண்-1 நியம எண்-9 ஆகஅமைகின்றது.

இந்த வாரம் தொடர்பு எண், அதிர்ஷ்ட எண் இரண்டும்- 7 ஆகவும், விதி எண்-9 ஆகவும் அமைவதால் உலக அரசியலில் ஓர் மயக்கமான மர்ம அமைதி நிலவும்!

30-ம் திகதிவெள்ளிக்கிழமை பிறக்கும் குழந்தை இந்த வாரத்தில் பிறக்கும் குழந்தைகளில் கூடிய அதிர்ஷ்டசாலியாய் இருக்கும் இப்பிள்ளை பெயர் சகரம் அல்லது நகரம் முதலெழுத்தாய் வரக்கூடிய பெயர்களில் சகரம் முதலெழுத்தானல், அனுகூல எண் 5 வரக்கூடிய பெயரும் நகரம் முதலெழுத்தானல் அனுகூல எண் 3 வரக்கூடிய பெயரும் வைத்தல் நன்று. இப்பிள்ளை பிறக்கும் நேர ஓரையைக் கொண்டு இப்பிள்ளையின் பிரபல்யங்களை அறியலாம்.

### எண் 1

தேதி1,10,19,28ஆகியதேதிகளில் பிறந்தவர்களின் எண் ஒன்ருகும். இவர்களுக்கு இந்த வாரம் மூற்பகுதியில நண்பர்களால் வாழ்க்கை வளம்பெற உதவியுண்டு. வியாபாரத் தொழில்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிர்பாராதவகையில் நண்பர்கள், முதல் கொடுத்து உதவக்கூடும். சிலர் வீண் விவகாரங்களில் ஈடுபட்டு கரைச்சல்படவும் நேரலாம். வார இறுதியில் போட்டி சிரமங்கள் தோன்றலாம். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் இருந்தால் நல்ல முன்னேற்றமுண்டு. திங்கட்கிழமை நற்கருமங்கள்-பிரயாணங்கள் செய்வதைத் தவிர்த்து அவதானமாக நடந்துகொள்ளவும்.

### எண் 2

தேதி 2, 11, 20, 29 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் எண் இரண்டாகும். இவர்களுக்கு இந்த வாரம் பகையாளிகள் தோன்றக்கூடும். எதிர்பாராத முட்டுக்கட்டைகள் ஏற்படலாம் நீதிஸ்தலம் செல்லவேண்டிவரும். குடும்ப வாழ்க்கையிலும் சிக்கல்கள் தோன்றலாம். நேற்றுப் போற்றியவர்கள் இன்று தூற்றவும் கூடும். குடும்ப வாழ்வு சர்க்கஸ் ஆட்டம் போல் தோற்றும். மனதைத் தளரவிடாது நடந்துகொள்ளவும். புதிய முயற்சிகளைப் பின்போடல் நலம். வியாழக்கிழமை ஓரளவு நன்மையாக இருக்கும். செவ்வாய்க்கிழமையை மிகவும் அவதானமாய்க் கழிக்கவும்.

### எண் 3

தேதி 3, 12, 21, 30 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் எண் மூன்ருகும். இவர்களுக்கு இந்த வாரம் காரியங்கள் சித்தி பெறும். மனமகிழ்ச்சிக்குரிய காரியங்கள் நடைபெறும். புத்திரர்களால் சந்தோஷமுண்டு. பிரமச்சாரிகளுக்கு காதலால் சந்தோஷமுண்டு. மனச்சந்தோஷத்தால் தீவிரமாகத் தொழில் முயற்சிகளிலும் ஈடுபாடு உண்டாகும். எனினும் உங்கள் உழைப்பின் பயனைப் பிறர் அனுபவிக்கவும் கூடும். இந்த வாரம் கடன் கொடுத்தால் திரும்பப் பெறமாட்டீர்கள். கடின உழைப்பால் தேக சுகம் பாதிக்கக்கூடும்

### எண் 4

தேதி 4,13,22,31 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் எண் நான்காகும். இவர்களுக்கு இந்த வாரம் எதிர்பாராத நிகழ்ச்சிகள் வாழ்க்கையைப் பாதிக்கும். எதிலும் மனம் அலட்சியமாக இருக்கும். உறவினர்களால் கஷ்டங்கள் ஏற்படலாம். அரசியலில் ஈடுபட்டவர்களுக்கும் அகம்பாவக் குணத்தால் வீழ்ச்சியுண்டாகும். 30 வயதுக்கும் 35 வயதுக்குமிடைப் பட்டவர்களுக்கு மிகவும் வீழ்ச்சிக்கு இடமுண்டு. அவர்கள் எதிலும் பொறுமையுடன் மௌனமாக இருத்தல் உத்தமம் 40 வயதுக்குமேற்பட்டவர்களுக்கு அந்தஸ்து, அதிகாரம், புகழ் கிடைக்கலாம்.

### எண் 5

தேதி 5,14,23 ஆகியதேதிகளில் பிறந்தவர்களின்எண் ஐந்தாகும். இவர்களுக்கு இந்த வாரம் பொதுஜன ஆதரவு பெருகும் பணம் விரயமாவதற்கு அடிகோலும். தொழில் புரியுமிடத்தில் அவதானம் வேண்டும். எக்காரியத்திலும் யாக்கிரதையாக பணம் செல்லுகிறபடி நடந்துகொள்ளவும். பிறர் யோசனைப்படி நடக்கவேண்டாம், பணத்துடன் புளங்குபவர்கள் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். திருடர் பயமுண்டு. ஏற்றமிறக்கமான காலம்.

### எண் 6

தேதி 6,15,24 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் எண் ஆருகும்- இவர்களுக்கு இந்த வாரம் நீண்ட நாட்களாக் காத்திருந்த காரியம்கைகூடும் தேவி வழிபாடு உடையவர்களுக்கு இலக்ஷ்மி கடாட்சமுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் பொருள் ஈட்டுவதில் புதுப்புது வழிகளைக்கையாண்டு பேரும், புகழும் பெறுவர். இன்ப நினைவுகள் மனதில் தோன்றிக் களிப்புறச்செய்யும் வெள்ளிக்கிழமை பெண்களினுல் கஷ்டம். அவதானம்.

### எண் 7

தேதி 7,16.25 ஆகியதேதிகளில் பிறந்தவர்களின் எண் ஏழு ஆகும். இவர்களுக்கு இந்த வாரம் அதிக பிரயாணங்கள் ஏற்படமுடமுண்டு உயர் பதவி கிட்டும். வெளிப் பார்வைக்கு அதிஷ்டகரமாகத் தோன்றும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றச் சிரமம் ஏற்படும், முதல் விட்டுச் செய்யும் தொழிலில் முன்னேற்றமுண்டு,மனஉறுதி ஏற்படும். தெய்வ அனுக்கிரகமுமுண்டு. குடும்பப்பற்று கூடுதலாக இருக்கும், பலவித போராட்டமும், சோதனைகளும் ஏற்படலாம். வெள்ளி கிழமையை அவதானமாகக் கழிக்கவும்.

### எண் 8

தேதி 8, 17,26 ஆகியதேதிகளில் பிறந்தவர்களின் எண் எட்டாகும். இவர்களுக்கு இந்த வாரம் சிறிய குழப்பத்தையும் தோல்வியையும் குறிக்கிறது, பணத்துக்கும் பதவிக்கும் சிரமப்படவேண்டி வரும். தொடங்கிய கருமங்கள் இடைநடுவில் விடவேண்டியும் நேரிடலாம். வீண் முயற்சிகளையே அதிகமாகக் குறிக்கிறது. அற்ப காரியத்துக்கும் பெரும் கோபம்பட்டுப் பெரிதாக்கும். பொறுமை சாந்தம் மிக முக்கியம். அவப்பெயர் ஏற்படலாம். திங்கட்கிழமையை அவதானமாகக் கழிக்கவும்.

### எண் 9

தேதி 9,18,27 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் எண்

(6-ம் பக்கம் பார்க்க)

---

# இதுதான் வாழ்வா?

பாயில் இருந்தே தலையைத் தூக்கிப்
பார்த்துத் தாயைப் பற்றும் மதலை,
பையிற் புத்தகம் கையிற் கொண்டு
பள்ளியை நோக்கிப் பாயும் சிறுவர்,
பருவம் அடைந்து உருவம் தெரிய
உடைகள் அணிந்து உலவும் நங்கை,
தெருவில் நின்று வம்பு பேசி
தேவை இன்றி திரியும் காளை
கொள்விலை என்றே பொய்மை கூறி
கொள்ளையடிக்கும் கொடிய வணிகர்
மெள்ள மெள்ள லஞ்சம் வாங்கி
மாடிகள் கட்டும் பெரிய மனிதர்,
உரக்க உரக்கக் கத்திக் கத்தி
உதிரம் வற்றும் உபாத்தியாயர்.
பள்ளிப்பணியில் மோசம் செய்து
ரியூட்டரி போகும் 'மாஸ்டர்'மார்கள்
பரக்கப் பரக்கப் பறந்து திரிந்து
பணத்தைச் சேர்க்கும் பாவ மனிதர்,
வியர்வைத் துளியை வீணே சிந்தி
விளைவு இன்றி வாடும் உழவன்,
ஐயா பிச்சை என்றே அலறி
அரை வயிறுண்ணும் ஆண்டிக் கூட்டம்,
இவர்கள் எல்லாம் இந்த வாழ்வில்
கண்டது என்ன? காண்பதும் என்ன?

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து
பொய்யே மன்று வரையில் பேசி,
நன்றி மறந்து நண்பரை இழந்து,
பன்றிகள் போலே பலதையும் தின்று,
இலஞ்சம் வாங்கி இலட்சம் சேர்த்து,
இன்பமடையும் வழியெனவெண்ணி,
மங்கையை நாடி மதுவையும் நாடி,
மானம் போக்கிட மதியை இழந்து,
குடியில் மூழ்கிக் கொலையும் செய்து,
படிப்படியாகப் பாவம் சேர்த்து,
நித்திரை கெட்டு நேர்மையும் கெட்டு
பகலும் பலதும் நினைந்து நடுங்கி,
மனத்தின் சாட்சி மலையாய் வளர்ந்து,
மனதை அலைக்கழைத்து அரற்றி,
போதைப் பொருளைத் தேடிக் குடித்து,
'பெதடீன்' ஊசி ஏற்றி அலுத்து,
செல்வம் வந்து சேர்த்த பொருளாய்
சர்க்கரை வியாதி சார்ந்து மிரட்ட
கூற்றுவன் உருவில் இதய நோயும்
கூடிவரவே கூவிக் கதறி,
ஆவி பிரிந்து அகலும் போதும்
அமைதி இன்றிக் குமைதல் தாமோ!

-கோகிலா மகேந்திரன்

# அரங்கும் அவையும்

### யாழ். இலக்கியவட்டத்தில் சாந்தனின் 'ஒட்டு மா'

'இன்றைய விமர்சனப் போக்கு' என்ற தலைப்பில் ஒன்றுகூடல் நிகழ்ச்சியை, உபவேந்தரைப் பாராட்டும் முகமாக நேநீர்விருந்துவைப வத்தை நடத்தி முடித்த யாழ். இலக்கியவட்டம் இவ் வாண்டின் மூன்றாவது கூட்ட மாக, வரதரின் வெளியீடாக, சாந்தனின் வார்ப்பாக வெளிவந்துள்ள 'ஒட்டுமா' என்ற குறுநாவல் அறிமுகவிழாவை சிறப்புற அண்மையில் யாழ் நகரில் நடாத்தியுள்ளது. தலைவரின் ஆரம்பவுரையைத் தொடர்ந்து முன்னேடி எழுத்தாளர் தேவன். கவிஞர் நுஃமான் என்போர் கருத்துக்கள் வழங்கினர். குறுநாவலுக்குரிய பண்புகளை இந் நூல் கொண்டுள்ளதெனவும் மத்தியதர தமிழ்வாலிபனுக்கும் மத்தியதர சிங்கள யங்கைக்கும் இடையே மலர்ந்த காதல் கதையாக இது அமைந்ததென்றும், இலகு நடையில் சுவையாக எழுதப்பட்ட துன்பியல் கதையெனக் குறிப்பிட்ட நுஃமான், குறித்த சிறுவிகிதத்தினரிடையே நிகழும் நிகழ்ச்சியை மையமாக வைத்து எழுதிய ஆசிரியர், இதன்மூலம் ஈழத்து இனப் பிரச்னையை அணுக முற்பட்டதால், பல இடங்களில் சம நிலை தவறி, தடம்புரண்டுள்ளார் எனக் குறிப்பிட்டார். பாத்திரச்சிருஷ்டியில் நிலாந்தி என்ற பாத்திரம் யதார்த்தபூர்வமாகஉள்ளது எனவும் கூறினர். நுஃமானுக்கு துன்பியலாகத் தென்படும் இக்குறுநாவல் தனக்கு இன்பியலாகத் தெரிகிறதெனக்குறிப்பிட்ட தேவன், 'அரைகுறை. காதல் சம்பவக்கதையை ஆபாசமாக, பாலுணர்வுசிந்த சித்திரியாது' பக்குவமாக நயமாக படைத்த சாந்தனை மெச்சுவதாகக் கூறினர். கலப்புத் திருமணம் ஈழத்து இனப் பிரச்னையைத் தீர்க்கும் மருந்தல்ல என்ற கருத்தும் நாவலில் இழையோடுகிறதென குறிப்பிட்டார். செங்கை யாழியான், செம்பியன் செல்வன், புஷ்பராஜன், டானியல், யேசுதாசன் என்போர் கருத்துப்பரிவர்த்தனையில் கலந்துகொண்டனர். பணம்கொடுத்துகணிசமான தொகையினர் பிரதிகள் பெற்றமை ஊக்கமளிக்கும் பண்பாய் அமைந்தது எனலாம்.

### கல்லூரி அரங்கில் கவியரங்கும் பட்டிமன்றமும்

கவிமணி வி. கந்தவனம் தலைமையில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கலைவிழாவில்சிறப்புநிகழ்ச்சியாக கவியரங்கு நடந்தது. கல்லூரிமாணவர்கள் உதயணன், தர்சினி என்போரும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் தலைவர் ஜெயபாலன். உ. சேரன் என்போரும் பங்குகொண்டு பாராட்டுப் பெற்றனர். வாழ்வுக்கு அவசியமானது விஞ்ஞானமா? மெய்ஞ்ஞானமா? என்ற பட்டிமன்றம் பண்டிதர் வ. நடராசா தலைமையில்விறுவிறுப்பூட்டும் வகையில் நிழ்ந்தது கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் விஞ்ஞானம் பற்றியும், உரும்பிராய் இந்துக்கல்லூரி மாணவர்கள் மெய்ஞானம் பற்றியும் வாதிட்டனர். பேச்சுக்கலையில் துறைபோகியோர் போல மாணவர்களின் சொற்போர் அவையினரை மகிழ்வித்தது.

முன்னொரு காலத்தில்கல்லூரிகள்தான் எழுத்து. பேச்சு, நாடகம் போன்றவற்றை வளர்ப்பதில் முன்னின்றன. இல்லங்களுக்கிடையே பேச்சு, எழுத்து நடிப்பு போட்டிகளை அமைத்தும், கலை-இலக்கிய மன்றங்களை, மாணவர் அவைகளை உத்வேகத்துடன் நடாத்துவித்தும் மாணவர்களை ஆற்றப்படுத்தின அதிபர்கள் தனிக்கவனம் செலுத்தி விஸ்வாசமாக உயிரூட்டிவந்தனர். இன்று இந்நிலையில் சற்றுத் தேக்கம் ஏற்பட்டிருப்பதையும் அலட்சியப்போக்கு இருப்பதையும் உணரமுடிகிறது. மாணவர் மன்றங்கள் துடிப்புடன் இயங்கினல், உரும்பராய் இந்துவை பின்பற்றி கல்லூரி உயர்தர வகுப்புகளுக்கிடையே -கல்லூரிகளுக்கிடையே பட்டிமன்றங்களை நடாத்தினல், மாணவர்கள் பிழையான பாதைகளில் செல்லாது, பேச்சுக்கலை வல்லுநராய், கவிஞர்களாய், பேனுமன்னர்களாய், நாடகம் நயக்கவல்லராய் மிளிர்தல்கூடும்.

### அரங்கத்தை நோக்கி அரிய நிகழ்ச்சிகள்...

'ஈழத்து இலக்கியவளர்ச்சி' என்ற நூலை முத்தமிழ்வெளியீட்டுக்கழகம் வெளியிட முடிவுசெய்துள்ளதும், இலங்கை அவைக்காற்றுக்கழகம் 'இராவணேஸ்வரன்' நாட்டுக்கூத்தை மேடையிட ஆயத்தங்கள் புரிவதும், இன்று (25-3-79) 'கந்தன் கருணை' என்ற ஆட்டம் பாட்டு விரவிய நவீன நாடகத்தை வீரசிங்கம் மண்டபத்தில் நாடகஅரங்கக் கல்லூரி மேடையிடுவதும் 'ஈழத்து இலக்கியவானில் ஈழகேசரியின் பங்கு' என்ற தலைப்பில் ஆய்வரங்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் இம்மாத இறுதியில் நிகழ இருப்பதும் இலக்கிய - கலை அன்பர்களுக்கு இனிக்கும் செய்திகள்தான்.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

# தசாம்ச...

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒன்பதாகும். இவர்களுக்கு இந்த வாரம் நற்காரியங்களில் ஈடுபட்டு நற்பலன் பெற இடமுண்டு. அரசியலில் ஈடுபட்டோருக்கு கௌரவமான புதவிகள், நன்மதிப்புகள் கிடைக்கலாம். பொலிஸ் இராணுவம் போன்ற பதவிகளிலுள்ளவர்களுக்கு மதிப்பும் உயர்ச்சியும் கிட்டும். தெளிவான புத்தியும் இடையறாத முயற்சியும். செல்வ விருத்தியும் ஏற்பட இடமுண்டாம் செவ்வாய்க்கிழமை சிறிது அவதானமாகப் புது முயற்சிகளில் ஈடுபடாதிருத்தல் நலம்.

'வரசி'

சி. அ. செல்வத்துரை,
கூளாவடி,
ஆனைக்கோட்டை.

# ஜயந்தி

அன்று பகல் என் கடமை நேரத்தில் தாமரைச்செல்வியின் குரல் என் பணிமனை தொலைபேசியில் பல தடவை ஒலித்தது. அங்கங்கு பலவேறு நிலையங்களில் பணிபுரியும் விடுதித் தோழியர் முழுப் பேருமேகவன சிரத்தையுடனே என் உடல்நலம் குறித்து விசாரித்தார்கள். அவர்களிலே ஜயந்தி முதன்மை பெற்றுள்-சொல்லவேண்டியதில்லை. 'நேற்றிரவு ராமன் இரண்டொருதடவை வந்து பார்த்ததாமே, சிவா! நீங்க அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்திர்களாம். அதனாலே திரும்பிட்டாரு'-ஜயந்தியின் குரல் காதுக்குள்ளே கிணுகிணுத்து ஒலித்தது 'நிரம்ப நன்றி ஜயந்தி, நீ கொடுத்த மாத்திரைகள் நன்றாகத் தொழில் செய்தது!-'என்றேன். 'இரண்டு மூன்று தினங்கள் ஓய்வெடுங்கள் சிவா! பாடத்துக்கு அவசரப் படாதீர்கள். ராமன் மாலை உங்களைச் சந்திக்கும். அந்தாளு எங்க விடுதியிலேதான் இரவுக்கெல்லாம் றிக்ஷோவைக் கொண்டாந்து போட்டிட்டு தங்கிப்போவாரு...'-தொலைபேசி மின்கம்பிகளில் தவழ்ந்துவந்த குரலினிமையை நான் இன்புற்று அதில் லயித்திருக்க, ஜயந்தி 'படக்'கென்று தன் பேச்சை முடித்து தந்தி இணைப்பைத் துண்டித்துக் கொண்டாள்.

அமைதியின் இறகுகளாக உறங்கிக்கிடக்கும் சென்றகால!-அதுபற்றிய நினைவலைகள், இவ்விதமாய் ஒன்றன்பின் ஒன்றாய் மெல்லச் சுழித்து - பரவும் இது சமயம் நினைவுகள் ஓரோர்வேளை ஒன்றையொன்று விலக்கி முந்திக்கொண்டு முன்னிடம் பெறக் குதித்தோடிவருகின்றன...திடுப்பாகச் சுலைத்துக்கொண்டிருந்ததை நங்கேலபக்கெனக் காகிதயிடம் பறிகொடுத்துவிட்ட சிறு குழந்தையின் நிலையில் கண்கள் வெட்டவெளியை வெறிச்சிட்டு நோக்க சில வேளை செயல் குன்றிச் சிந்தனையில் மூழ்கினேனாய் உட்கார்ந்திருந்தேன்.

நாளும் பொழுதுமாக நான் இட்ட தாபத்தில வளர்ந்தெழுந்த ஜயந்தியைச் சுற்றி நாள நாளாக சிலந்தி நூலிழைப்பின்னலாகப் படர்ந்து வந்ததொரு நேசப்பான்மை, இனப்படுத்த முடியாததொரு வசியக் கவர்ச்சி-ஏன், இதோ இது சமயம் கப்பியிருப்பது போன்றமையல் என்றுகூடச் சொல்லிவிடலாம்தான், அந்த வகைப்பட்ட விநோத ஈடுபாடு, அது வெய்யதாய் நுண்ணிதாய் பெற்றதொரு தாக்கம். சித்திரைப்புத்தாண்டு கொண்டாட தாமரைக்கன்னியர் அன்பு அழைப்பேற்று அவர்கள் கிராமத்துக்குச் சென்றிருந்தபோது ஜயந்தியின் இல்லத்தில் அவள் பெற்றோர் முன்னிலையில் ஆனல் அவர்கள், அதனைத் தெரிந்துகொண்டிருக்க முடியாத நிலையில் அது சம்பவித்தது. சம்பவித்ததென்று சுருக்கமாக முடித்துவிடுகிறேனே? இந்தப் பூமியே ஒரு நொடிக்குள் கபாலதுண்டலமடித்து குட்டிச்சுவராக நாசமாய்ப் போனது போல-அந்த 'அவலம்' பற்றி பின்பு சொல்லுகிறேனே.

ஜயந்தி டெலிபோனில் என்னை அழைத்துப் பேசியது முதலாக ஜயந்தி பணிபுரியும் மருத்துவமனையில் ஒருநாள் ஒரு பொழுது தலைசரிந்து அப்பொற்கொடியின் அன்புப் பராமரிப்பினைச் சுகித்தின்புறும் வாய்ப்புத் தவறிப் போனதை எண்ணி மனம் வருந்தினேன். இது பெறு, கிராமத்திலிருந்து சில நாட்களுக்குள்ளாக என் கல்யாணப் பேச்சுடனே பட்டணத்துக்கு வந்திருந்த என் தந்தைக்குக் கிட்டிற்று. அது சமயம் ஜயந்தி கடினமானதொரு சத்தியசோதனைக்குள்ளாகி அதில் புடமிட்ட பொன்னாக ஒளிர்ந்தாள். அது பற்றியும் அப்பொழுது சொல்கிறேன்...

மாலையானதும் என் பணிமனை வேலைகளை முடித்துக் கொண்டு என் வசிப்பிட விடுதி நோக்கி மெல்ல நடந்தபோது பாதி வழியில் 'ரிக்ஷோ ராமனைச் சந்தித்தேன். என்னைக் கண்ட மாத்திரத்தே வண்டியை என் பக்கமாய் நகர்த்தி 'உட்காருங்க சாமி, கொண்டுபோய் விட்டிடுறேன்' என்றான்.

'உன் தோள்மீதா, வேண்டாம் ராமன்! சிறிதுதூரம் தானே, நடந்தே போயிடலாம்'- நான் சொல்லவும் கேட்காமல் 'நேற்றிரா முழுதாய் ஜுரமடிச்சிருக்கு. நடக்கக்கூடாதுங்க. ஜயந்தி அம்மா மாத்திரைகள் எல்லாம் கொடுத்துப் போயிருக்கிறுங்க, வண்டியிலே ஏறி உக்காருங்க'-என்று விடாப்பிடியாக வற்புறுத்தி வண்டியை என் முன் னிலைக்கே கொணர்ந்து நிறுத்திவிட, அதற்கு மேல் நான் ஏதும் பேச வாயெழாமல் ரிக்ஷோவுக்குள் தாவினேன். ஒரு சில நிமிடங்களில் அது என் விடுதி வாயிலில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்தது.

'எவனே ஒரு விகட ராமனின் குதிரையும் வண்டியும் முன்னே இரண்டுபேர் பிடித்திழுக்க, பின்னே நின்று இரண்டுபேர் தள்ள மாதம் காதவழிபோனதாம்- என்று அப்படி ஒரு தமிழ்ப் புலவர் பழைய நாள் ஜட்காவண்டிப் பயணம் பற்றிக் கவிபாடியிருக்கிறார் - விடுதி வாயிலில் இறங்கி சிறிதே ஓய்வெடுத்து நின்ற வாக்கில் ராமனிடம் பேச்சுத்தொடுக்கவும், 'சொல்லுங்க சாமி கேட்கிறேன்! அந்த விடுதியிலே யாழ்ப்பாணம் மாஸ்டர் யாழ்ப்பாணம் மாஸ்டர் என்று எல்லாப் பொண்ணுகள் நாவும் உங்க பெயரைத்தானே சுவைத்து மகிழும். இராப்பொழுது ஜாமை எனக்கு. அதனாலே அங்கு உங்களை ஒரு நாளும் பார்க்கக் கிடைத்ததில்லை பகலோடே வந்து போய்விடுவீங்க ஆவலுடனே காத்திருந்தேன். இன்றைக்கு அது அரிதாகக் கிடைத்திருக்கு- பேசவும் பழகவும்-யாழ்ப்பாணத்து ஆட்களிலே பள்ளிக்கூட மாஸ்டர்மார். ஆபீஸ் வேலைக்குப் போகிறவங்க எப்பவுமே என் மனதுக்குப் பிடித்தவங்க, தோட்டப் பள்ளியிலே நான் ஆரம்பக் கல்வி கற்றுக்கொண்டதே ஒரு யாழ்ப்பாணத்து மாஸ்டரிடம் தான். ஒரு கை வழங்காது. தானே ஒரு கையால் சமைத்துச் சாப்பிடுவார். தோட்டத்துக் காய் கறி எல்லாம் கொண்டுபோய்க் கொடுப்போம் சில சமயங்களில் சமையல்வேலைகளில் நாமும் உதவி ஒத்தாசை செய்வோம். படிக்க வந்திருக்கிற பிள்ளைகளை அணுகி வாரிப்படியாத அவர்கள் தலைமயிரைக் கைப்பிரம்பினல் தளாவி வீட்டிலே எண்ணை இல்லையா சீப்பு இல்லையா முகம் பார்க்கிற கண்ணாடி இல்லையா-என்று கேட்பார்...'-ராமன் வாயில் இந்தவிதமாய் டணிவன்பும் பயபக்தியுமாகப் பேச்சுப் பிறக்கிறது. (தொடரும்)

அ. செ. மு.




### முன்னவனே முன் நின்றால்(கங்கைகமலம்)

பருத்தித்துறை. வியாபாரி மூலை, தேவலவத்தையில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ பத்திரகாளி -வெற்றி வீரபத்திரேசன் கோவில் ஜீர்ணோத்தாரணத் திருப்பணிக்குப் பொருள் சேகரித்தற்பொருட்டு வியாபாரி மூலையைச் சேர்ந்தவரும் இக் கோவிலை நிர்வகிக்கும் புனர் சுமைப்பாவனுமான திரு சி. நா. சொக்கநாதபிள்ளை அவர்களால் பருத்தித்துறை கலாபவன அச்சகத்தில் அழகாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ள 'முன்னவனே முன்னின்றால் (கங்கை கமலம்) என்னும் சிறு நூலினைப் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றேம்.

சென்ற நூற்றுண்டின் அந்தத்தில் ஆலமரத்தடியிலிருந்த வழிபாட்டிடம் உளளூரவர்களினதும் அயலூரவர்களினதும் பொன்னும் பொருளும் கொண்டு இன்று பெருங்கற் கோவிலாக உருவெடுத்து உயர்ந்துநிற்கின்றது. அல்வாய்-புலோலிக் கிராமங்கள் இணையும் அதியுயர்ந்த நிலப்பரப்பின் நடுவே அமைந்துள்ள பெருங்கோவிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பத்திரகாளி அம்பிகை சமேத ஸ்ரீ வெற்றிவீர பத்திரேசன் குறுகிய ஓரிடத்தில் பரிவார மூர்த்திகளுடன் நெருங்கிமுடங்கியிருக்கும்வண்ணம் பாலஸ்தாபனம்கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆலய நிர்வாகிகள் செய்தார்கள். பெருங்கற்கோவிலிற் திருப்பணிகள் மேற்கொள்ளும் நோக்கத்துடனேயே பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. ஆனல் இந்த நிலையே கடந்த சில ஆண்டுகளாகத்தொடர்கிறதென இந்நூலைப் படிக்கும்போது அறியமுடிகின்றது.

புதிதாக ஒரு கோவிலை அமைப்பதிலும் பார்க்க, முன்னரேயே அமைக்கப்பட்டுள்ள ஒருகோவிலை அதற்குரிய காலத்தில் திருப்பணிகள் செய்வித்து அவ்வாலயத்தில் நித்திய பூஜைகள் தவருது நிகழ்விப்பதே மேலான புண்ணியம் என்பது சாத்திரங்கள் கூறும் உண்மையாகும்.

எனவே சைவப்பெருமக்கள் யாவரும் மேலான இபபுண்ணியத்திற் பங்குகொண்டு பிறவிப் பெருங்கடல் நீந்திப பேரின்பம் பெறுவார்களாக.

இந்த நூல் சிறிதாயினும் இதின் உளளடக்கம் சாலப பெரியது. கடுகு சிறிதாயினும் காரம் பெரிதல்லவா?

-முருகு, திருக்கேதீஸ்வரம்

### பெருந்துயில்

பாதை யோரத்தில்
துயில்பவன்
இவன்
பஞ்சணையில்
பள்ளி கொளபவன்
அவன்

இவனது—
உதிரச் சிதறலில்
அவனது—
உயர்ச்சி

காலத்தின் கரைவில்
அவன்—
மண்ணுள்ளே,
இவனருகே,
பேதமற்ற.
பெருந்துயில்
கொள்ளுகிறான்

-மயில் தவராஜன்

★ நடிப்புக் கலை

# முழுமை நிலை பெறுவதற்கு நடிகனுக்குப்பயிற்சிமுக்கியம்

ஈ. ஆர். திருச்செல்வம்

நிகழ்வொன்றில் எமது கவனம் குவிவதற்கு உறுதியானதும் திட்டமுமான நோக்கம் இருப்பது அவசியம். நடிகனுக்கு கவனம் இன்றியமையாதது. எனவே கவனத்தை வளர்ப்பதற்காக நாடக, அரங்கக் கல்லூரிகளில் பல அப்பியாசங்கள் தரப்படுகின்றன. நடிகன் தான் அறிந்து செய்கிற அப்பியாசங்கள் ஒரு பலனைக் கருதியே செய்யப்படுபவை என்பதனைக் கருத்தில் கொள்ளவேண்டும். அதாவது ஒரு ஊக்கியோ பலனோ இல்லாமல் ஒரு செயல் நிகழ்வதில்லை.

நடிகன் கவனத்தில் முழுமை நிலைபெறுவதற்கு ஒழுங்கு முறையில் அமைந்த பயிற்சி மிக முக்கியம். இந்நோக்கத்துடன் பல அப்பியாசங்கள் கீழே தரப்படுகின்றன. அப்பியாசங்களைப் பழகிக்கொள்ளும்போது ஓர் உறுதியான நோக்கத்தின் அடிப்படையில் செய்கின்றோம் என்பதனை நடிகன் மறக்கக்கூடாது. ஒவ்வொரு அப்பியாசத்தின் முடிவிலும் ஆசிரியர்-பயிலுநர் கலந்துரையாடுவதன் மூலம் குறைநிறைகளைத் தெரிந்துகொள்வது இன்றியமையாதது.

அப்பியாசம் I

1. சதுரங்கம் ஆடத்தெரிந்துகொண்ட பயிலுநர் மற்றொருவருக்கு விளையாட்டின் அடிப்படை விதிகளைச் சொல்லித்தருகிறார். சுமார் இருபது நிமிடங்கள் வரை விதிகளை விளக்கியபின் மற்றவர் கிரகித்தவற்றை அறிதல்.

2 சமையற் பாகம் தெரிந்தவர் குறிப்பிட்ட கறியை ஆக்குவது எங்ஙனம் என்று மற்றொரு பயிலுநருக்கு விளக்குகிறார். விளக்கத்தைக் கேட்டவர் அதை மீளவும் கூறுகிறார்.

3. பயிலுநர் தன் சகபாடியான பயிலுநர் ஒருவருக்கு புகையிரத நிலையத்துக்குப் போகும் வழியை விபரிக்கிறார் இந்த அறிவுறுத்தலைக் கிரகித்தவர் அதைத் திரும்பவும் சொல்கிறார்.

4 பயிலுநர் மற்றொருவருக்கு காரை ஓட்டும் நுணுக்கங்கள் பற்றியும், பின்புறம் ஓட்டுவது பற்றியும் விளக்கம் தருகிறார். இதை மற்றவர் ஊமத்தில் செய்துகாட்ட வேண்டும்.

5. அந்நியமொழியில் பேச்சு வழக்கில் உள்ள ஐந்து சொற்றொடர்களை ஒரு பயிலுநர் மற்றவருக்குச் சொல்லித் தருகிறார். இதனைக் கேட்டவர் திரும்பவும் ஒப்புவிக்கிறார்.

அப்பியாசம் II

இத்தொகுதியில் தரப்படும் அப்பியாசங்களைப் பயிலுநர் குழுக்களாகப் புரிந்து செயலாற்றவேண்டும்.

1. சாதாரண வழக்கிலுள்ள பத்துச் சொற்கள்,

2. பத்து விதமான பூக்களின் பெயர்கள்.

3. பதினைந்து நாடக ஆசிரியர்களின் பெயர்கள்.

4. பத்து வகையான உணவு வகைகள்.

5 பதினைந்து பெயர்ச் சொற்கள்.

அப்பியாசம் III

ஆசிரியர் ஒரு ஒழுங்குமுறையில் அமைந்த எண்களைக் கரும்பலகையில் எழுதி அவற்றை மனதில் பதித்துக் கொள்ள இரண்டு நிமிடங்கள் தருகிறார். கரும்பலகை அழிக்கப்படுகிறது. பயிலுநர் ஞாபகத்திலிருந்து மீள வரவழைத்து எண்களை எழுதுகிறார்.

1. ஒவ்வொன்றும் இரண்டு எண்களைக் கொண்ட பத்துத் தொகுதிகள். (உ-ம்) 68, 45

2. நான்கு எண்கள், ஐந்து தொகுதிகள் (உ-ம்) 1806, 1458.

3. மூன்று எண்கள் ஐந்து தொகுதிகள் (உ-ம்) 2081,010

4. மூன்று தொகுதிகள். ஆனால், முதற்தொகுதி மூன்று எண்களைக் கொண்டதாகவும், மற்றவை இரண்டும் நான்கு எண்களைக் கொண்டதாக அமையவேண்டும். (உ-ம்) 889, 1067, 1200 தானங்களை நன்றாகக் கிரகித்த பிறகு முதலாவது தொகுதியையும் இரண்டாவது தொகுதியையும் கூட்டும்படி கேட்கலாம். ஒழுங்கை மாற்றி முதலாவது தொகுதியை மூன்றாவதுடன் கூட்டி மூன்றாவது தொகுதி மொத்தத்திலிருந்து கழிக்கும்படி கேட்கலாம். ஒழுங்கை மாற்றிப் பல முறை இந்த அப்பியாசங்களைச் செய்விக்கலாம்.

5, ஆறு எண்களைக் கொண்ட தொகுதி தரப்படுகின்றது. (உ-ம்) 565, 168. எண்களின் ஒழுங்கு நிரையை மாற்றி (Reverse order) எழுதும்படி கேட்கலாம்.

மேற்தரப்பட்ட அப்பியாசங்களின் மூலம் தரப்பட்ட நேர காலத்தில் ஒருவன் கிரகித்தவற்றை மீள ஒப்படைக்கச் சந்தர்ப்பம் தரப்படுகிறது. இவ்வப்பியாசங்கள் மனக்கணக்கில் செயல்படவேண்டும்.

அப்பியாசம் IV

1. ஆசிரியர் கற்பித்தல் உபகரணங்களை (உ-ம் மண் பொம்மை) வகுப்பில் அறிமுகப்படுத்துகிறார், கருத்தூன்றிக் கவனித்தவற்றை விவரிக்கும்படி மூன்று நிமிடங்கள் வரை தரப்படலாம். கருத்தூன்றிக் கவனிப்பதில் முன்னேற்றம் காணும்வரை ஆசிரியர் இத்தகைய அப்பியாசங்களைப் பலமுறை செய்யலாம்.

2. அப்பியாசத்தின் போது பயிலுநர் இவ்விரண்டு பேர்களாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒருவரை ஒருவர் மூன்று நிமிடங்கள் வரை அவதானித்த பிறகு சகபாடியைப் பற்றிய வருணனையை எழுதும்படி பணிக்கலாம்.

அப்பியாசம் V

கட்டளைகளை நிறைவேற்றும் பாங்கில் நாம் வினைகளைச் செய்யும்போது கமலநாதன் கூறுகிறான், "எழுந்திரு", கமலநாதன் கூறுகிறான், "ஒற்றைக்காலில் நில்". கமலநாதன் கூறுகிறான், "துள்ளி மிதித்துப் பாய்". என்ற கட்டளைகளைப் பிறப்பிக்கும்போது பயிலுநர் கட்டாயம் செய்யப்படவேண்டிய கருமங்களைப்போலச் சொன்னதைச் செய்யவேண்டும். குழுத்தலைவர் தமது கற்பனை நாட்டத்துக்கேற்ப கட்டளைகளைவழங்கலாம். 'கமலநாதன் கூறுகிறான்' என்ற சொற்றொடர் சொல்லப்படாமல் கட்டளை பிறக்கும் போதெல்லாம் பயிலுநர் அப்பியாசங்களைச் செய்யக்கூடாது. கட்டளைகள் ஒன்றின்பின் ஒன்றாக மின்னல் வேகத்தில் வழங்கப்படவேண்டும். அறிவுறுத்தலைக் கவனியாது, கமலநாதன் கூறுகிறான்' என்ற சொற்றொடர் இல்லாமல் கட்டளைக்குப் பணிந்து அப்பியாசம் செய்பவர்கள் குழு விளையாட்டில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர். ஒருவரைத்தவிர மற்ற எல்லோரும் வெளியேற்றப்படும்வரை விளையாட்டைத் தொடரலாம்.

ஒரு நிகழ்வை மாத்திரம் கருத்தூன்றிக் கவனிக்கவே இவ்வகையான விளையாட்டுக்கள் தரப்படுகின்றன. கருத்தூன்றிய பின் நிகழ்வில் கவனத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்துதல் மற்றொரு நிலையாகும். ஒரு நிகழ்வுக்கான காரண காரியத்தைக் கற்பித்துக் கவனித்தவுடன் நாம் அந்த நிகழ்வால் ஈர்க்கப்படுகிறோம். நோக்கம் திடமானதாகவும், உறுதியானதுமாக இருந்தால் நாம் கவனித்த நிகழ்வு மனதில் பதிந்துவிடுகின்றது. (உ-ம்) பிரயாணம் செய்யும்போது நாம் வாகனத்தை நிறுத்தி நகரத்துக்கு வழியை விசாரிக்கிறோம் எமது அடிப்படை நோக்கம் நகரத்துக்கான வழியைத் தெரிந்து கொள்வதாகும். வழியைப் பற்றிய விபரங்களை அறிந்தவுடன் எமது நோக்கம் (Motive) கைகூடுகிறது. நிகழ்வுகளைக் கவனிக்கும்போது நோக்கம் ஊக்கியாக அமைகிறது.

நோர்வேயின் இயற்கை எழில் பற்றிய படக்காட்சியைப் பார்க்கும்போது நடிகன் என்ற வகையில் எமக்கு அவசியமான தரவுகளை மனதில் பதிய வைத்துக்கொள்கிறோம்.

பெண்பாவை

இப்பொழுது இப்சனின் பெண்பாவை (The Poll's House)யை மேடையேற்ற வேண்டி ஏற்படுகின்றது. இந் நாடகத்தில் நடிகரைப் பொறுத்தவரையில் சில காட்சிகள் மந்தமாக இருக்கலாம். கிறிஸ்டீனும், நோராவும் தோன்றும் முதலாவது காட்சி மந்தமானதுதான். கிறிஸ்டீன் நோராவின் வீட்டுக்குவந்திருக்கும் நோக்கம் உழைத்துச் சம்பாதிப்பதற்கும், தனது சிநேகிதியின் நலத்தைத் தெரிந்துகொள்வதற்குமாகும். கிறிஸ்டீனாக நடிபங்கு ஏற்று நடிப்பவர் பாத்திரத்தைஉணர்ந்து நடிப்பதன் மூலம் சொல்லாடல் ஜீவகளையோடு அமையும். மாறாக இருவருக்குமிடையில் ஏனோதானோ என்று உரையாடல் நிகழ்ந்தால் காட்சி சோடைபோய்விடும். சொல்லாடலும் கருவை நகர்த்துவதற்கான ஒரு சாதனமாக மாத்திரம் மாறுகின்றது.

அவதானம் பற்றி இதுவரை நாம் கண்டதெல்லாம் ஆக்கபூர்வமானதாகும். எமது நோக்கம் திடகாத்திரமாக அமையும்போது கவனம் வழம் பெறுகின்றது. சிகை அலங்காரம் செய்யும் கலைஞர் சிகை அலங்காரம் செய்யும் போது அதில் கருத்தூன்றியிருக்கவேண்டும். சிகையை வெட்டித்தலுவது அல்லது 'இருப்பதி மொட்டை' அடிப்பதென்றால் எழுந்த மானத்தில் செயற்படலாம். ஒரு காட்சியில் பாத்திரம் தாங்கி நடிக்கும் ஒருவர், எதற்காக மேடையில் பாத்திரம் தாங்கி நிற்கிறோம் என்ற உணர்வால் உந்தப்பட்டு கருமமே கண்ணாய் செயற்படுகின்றார்- பாத்திரத்தைத் திறம்படச் சித்தரிக்கின்றார் எமது அரங்க அனுபவத்தில் மேடைக்கூச்சம் அல்லது மேடைப்பயம் "பயப்படுவதற்கு ஒன்றுமில்லை" போன்ற எதிர்மறையான அறிவுரைகளால் அற்றுப் போவதில்லை. மாறாக நடிகனின் ஆக்கபூர்வமான நோக்கினாலும் கடமையை நன்குணர்ந்திருப்பதாலும் மேடைக் கூச்சம் அற்றுப் போகிறது. ஆகவே ஒரு நடிகன் தன் கன்னி முயற்சியின் போது பாத்திரத்தின் ஆக்கபூர்வமான உணர்வுகளுடன் ஒன்றிக்கவேண்டும், தான் தாங்கும் பாத்திரத்தின் உணர்வுகளையும் அபிலாசைகளையும் மற்றொரு பாத்திரத்துக்கு மேடையில் வெளிப்படுத்தவேண்டும் என்ற தற்துணிபு இயற்கையாக அமையவேண்டும். மாறாக, 'நான் மேடையில் பாவனை செய்யவேண்டும்.' அல்லது 'நான் ஒரு நிலைப்படுத்திக் கவனம் செலுத்துகிறேன்' என்று கருதினால், நடிகன் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக கவனத்தின் பக்கம் அவனது மனம் திசைதிரும்புகிறது. ஆகவே நடிகனின் நோக்கம் தவறிவிடுகிறது. இச்செயல் நடிகனின் ஆளுமையைப் (Personality) பாதிக்கலாம் ஆனால் பாத்திரப் படைப்பில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

(தொடரும்)

## எவர் வகுத்த நீதி?

நீரென்றால் நீலநிற மாகத் தானே
பாரெங்கும் இருப்பதில்லை கடலும் நீல
நிறமென்றார் மாவலியின் நடையைப் போல
நிறமாகத் தான்நடையை போடா தாமே
அலையென்று எறிந்தெதிர்ந்து நடந்து மீண்டு
கலைபறியா பாடகன்போல் இரையு மாமே
இன்றுவரை கடல்காணேன் கள்ளத் தோணி
என்றழைத்தல் எவர்வகுத்த நீதியாகு(ம்)?

உலகவரைப் படத்திலேலே இலங்கை மேலே
உள்ளதுதான் இந்தியமென் றறிவேன் நானும்
திலகரொடு காந்திவழி போன தாலே
திரவியமாய் சுதந்திரத்தை பெற்றுள் ளார்கள்
தலைக்கள் பல தமிழ்நாட்டி லுண்டு ஏழை
தரித்திரரு மங்குண்டு அறிவே னுன்
நிலம் மிதித்தும் அறியேனை இந்தியாவின்
நிழலென்ப தெவர்வகுத்த நீதி யாகும்!

பச்சைமலை மூகட்டினிலே பிறந்த நானும்
பரந்துவளர் தேயிலையின் செல்வி தன்னை
இச்சையுட னணைத்தெனது வாழ்வு காலம்
இலைவளரத் தானேநான் ரத்தம் சிந்தி
கச்சுதனைக் கூடஇழந் தாலும் எந்தன்
அன்னையை ஈழவள நாட்டுக் காக
அச்சார மானவனைத் தானே நாடு
அற்றவனு எமவர்வகுத்த நீதி யாகும்?

.காவலூர் ஜெகநாதன்

## "ஒரு பாலை வீடு"

### தமிழ் நாடக உலகின் ஒரு புதிய நம்பிக்கை

இஞ்சையிருந்து ஒரு நூறு மைல் வட்டாரத்திலை, அவளைக்குத் தகுதியான எந்தவொரு ஆம்பிளையும் இல்லை; இந்த ஊர் ஆம்பிளையள், அவளையின்ரை அந்தஸ்தை எட்டிப்பிடிக்க ஏலாது.

ஸ்பானிய நாடகாசிரியரான கார்ஸியா லோர்காவின் 'ஒரு பாலைவீடு' என்ற நாடகத்தில் வரும் பேர்ணடா அல்பா என்ற வரட்டுத் திமிர்பிடித்த தாயின் வார்த்தைகள் இவை!

'ஒரு பாலைவீடு' நாடகத்தின் முக்கிய பாத்திரமான பேர்ணடா அல்பா, கூரமும் கண்டிப்பும் உயர்குடித்திமிரும் கொண்ட ஒரு தாய்; கணவன் இறந்துபோன நிகழ்ச்சியோடு நாடகம் ஆரம்பமாகிறது. பேர்ணடாவுக்கு ஐந்து பெண் பிள்ளைகள், மூத்தவள் அங்குஸ்டியாஸ்; அவளுக்கு வயது முப்பத்தொன்பது. இளையவள் அடெல்லாவிற்கு இருபது வயது. ஐந்துபேரில் ஒருவருக்குமே திருமணமாகவில்லை தனது பெண்பிள்ளைகளுக்கு மணம்பேசி வந்தஇடங்களெல்லாம் லாயக்கில்லாதவை என்று பேர்ணடா தட்டிக் கழிக்கிறாள்.

''வீதியிலிருந்து ஒரு துளிக் காற்று இந்த வீட்டுக்கு வரக் கூடாது. கதவுகளும் ஜன்னல்களும் செங்கல்லால் அடைச்சு விட்டமாதிரி நாங்கள் நடந்து கொள்ளவேணும். என்ரை தகப்பன், பாட்டன் எல்லாரின்ரை வீட்டிலையும் அப்படித் தான் நடந்தது'' என்று, தன் பிள்ளைகளை வீட்டுக்குள்ளேயே அடைத்து வைக்கிறபோது; வரட்டுக்கெளரவம் படைத்த இல யாழ்ப்பாணத் தாய்மார் நமது நினைவில் வராமல்போக மாட்டார்கள்.

மூத்தவள் அங்குஸ்டியாஸ் அழகில்லாதவள். எனினும் அவளின் சொத்துக்காக அந்தக் கிராமத்திலேயே அழகான பெட்ரோ எல் றொமானோ என்ற இருபத்தைந்துவயது இளைஞன் அவளை மணக்க முன்வருகின்றான், அடெல்லா என்ற கடைக்குட்டி அவனில் விருப்பம் வைக்கிறாள். இந்த உறவு தொடர்பாக சகோதரிகளுக்கிடையிலே ஏற்படும் குமைச்சல்களும், குரோதங்களும் பூசல்களும் நாடகத்தைவளர்த்துச் செல்கின்றன.

வெளியுலக வாழ்க்கையிலிருந்து - அதன் சுவைகளில் இருந்து துண்டிக்கப்பட்டு, அந்த ஐந்துபெண்களும் அப்பாலை வீட்டினுள் குமைவதை அந்தவீடு, கதவுகள், ஜன்னல்கள் ஆகிய படிமங்களுக்கூடாக லோர்கா சித்திரிக்கிறார் நவீன நாகரீகச் சீரழிவுகள் அணுகாத ஒரு விவசாயக் கிராமத்தில் மண்ணோடும் இயற்கையோடும் மக்கள் கொண்டுள்ள ஆழ்ந்த தொடர்பும் வாழத் துடிக்கும் ஆதங்கமும் லோர்காவின் இந்நாடகத்தில் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது.

காதலும், இருண்மையும், பாலியலும், உணர்வுக்கோலங்களும், கண்ணீரும், சிரிப்பும் லோர்காவின் நாடகங்களின் அடிநாதமாக உள்ளது. வாழ்க்கையின் சகல கடூரங்களையும் துன்பங்களையும் லோர்காவின் நாடகத்தில் பெண்மாந்தரே தாங்கிக்கொள்கின்றார்கள். லோர்காவின் துன்பியல் நாடகங்களில், 'ஒருபாலைவீடு' தான் மிகவும்யதார்த்தமானதென்று விமர்சகர்கள் கூறுவர். 'ஒருபாலைவீடு' நாடகத்தில் நாடக வடிவம் பூரணத்துவம் பெற்றுள்ளது. கதாபாத்திரங்களின் குணவார்ப்புகளும் உரையாடலும்செவ்விதமாகஅமைந்துள்ளன.

[9ம் பக்கம் பார்க்க]

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## முட்டாள் அரசனும் துணிச்சலுள்ள மந்திரியும்

அரேபிய நாட்டு இளைஞன் ஒருவன் தனது அழகிய வெள்ளைக்குதிரை மீது ஏறி இராச வீதி வழியாக பவனி வந்துகொண்டிருந்தான்.

அவன் அக்குதிரை மீது பவனிவருவதைக் கண்ட அவ்வூர் அரசன் அக்குதிரை மீது மோகம் கொண்டான்.

குதிரை மேல் பவனி வந்த இளைஞனை அழைத்து அக்குதிரையைத் தனக்குத் தரும்படியும் நூறு பொற்காசுகள் தருவதாகவும் அரசன் கூறினான்.

நூறு பொற்காசுகளைப் பெற்றுக்கொண்ட இளைஞன், தான் பவனிவந்த அக்குதிரையை அரசனிடம் கொடுத்தான்.

நூறு பொற்காசுகளைக் கொடுத்து அக்குதிரையை வாங்கிய போதும் திருப்தி கொள்ளாத அரசன். அது போன்ற மேலும் நூறு குதிரைகள் கொண்டு வந்து தரும்படி அவ்விளைஞனிடம் கேட்டான்.

அரேபியாவில்தான் இது போன்ற குதிரைகள் இருப்பதாகவும் அக்குதிரைக்குரிய பணத்தைத் தந்தால் அரேபியாவிற்குச் சென்று நூறு குதிரைகளை வாங்கிவருவதாகவும் இளைஞன் கூறினான்.

அரசனும் நூறுகுதிரைகளுக்குரிய பணத்தைக் கொடுத்தனுப்பினான். அன்று போல இளைஞன் என்றும் திரும்பவில்லை.

பல மாதங்களின் பின் ஊரில் உள்ள முட்டாள்களின் பெயர்களைச் சேகரித்துத் தரும்படி அரசன் மந்திரியிடம் கட்டளையிட்டான்.

மந்திரி அவ்வூரிலுள்ள முட்டாள்களின் பெயர்களைச் சேகரித்துக் கொடுத்தான், அதை ஆவலோடு வாங்கிப் படித்த அரசனின் முகம் கோபத்தால் அக்கினிப்பிழம்பாயிற்று.

'முட்டாள்களின் பெயர்களைச் சேகரிக்கும்படி கூறினால் எதற்காக என் பெயரை முதலில் எழுதினாய்?' என மந்திரியைச் சீற்றத்துடன் வினவினான் அரசன்!

'முன்பின் தெரியாத ஒரு அரேபிய இளைஞனிடம் நூறு குதிரைகளை வாங்கிவரும்படி பொற்காசுகளைக் கொடுத்த உங்களைவிட வேறு பெரிய முட்டாள் இந்நாட்டில் இருக்க முடியாது. அதனால்தான் தங்கள் பெயரை முன்னுக்குக் குறிப்பிட்டேன்" என்றான் மந்திரி.

மந்திரி சொன்னதைக் கேட்ட அரசன் வெட்கத்தில் தலைகுனிந்தான்

வான்மதி இராமநாதன்
(7-ம் வகுப்பு)
வேம்படி மகளிர் கல்லூரி.

### ஒரு திருத்தப் பிரேரணை

கிராம அபிவிருத்திச் சங்கமொன்றில் புகைத்தல் கூடாது என அறிவிக்கப்பட்டிருந்தது. பின்பு அங்குவரும் பல புகைப்பிரியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு திருத்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அதன் சாரம் என்னவெனில் "புகைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் புகைப்போர் புகையினை வெளியே விடக்கூடாது என்பதாகும்..."

தி. தவராசா
யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனம்

### வாழ்க எங்கள் ஏடு ஈழநாடு!

யோக சுவாமி ஆசி பெற்ற ஈழநாடு!
ஜோதியாய் மிளிர்கின்ற ஈழநாடு!!
ஈழவள நாட்டினிலே ஈழநாடு!
இருபதாண்டு நிறைவுபெற்ற ஈழநாடு!!
கல்லார்க்கும் கற்றோர்க்கும் ஈழநாடு!
நல்லார்க்கும் பொல்லார்க்கும் ஈழநாடு!!
அற்றார்க்கும் அயர்ந்தார்க்கும் ஈழநாடு!
உற்றோர்க்கும் உறவினர்க்கும் ஈழநாடு!!
உறுதுணையாய் சேவைசெய்த ஈழநாடு!
உலகமெலாம் போற்றி வரும் ஈழநாடு!!
ஈழநாட்டின் செய்திகளை எடுத்துரைக்கும்
ஈழநாடு!
உலகப் புதினங்களை முன்புரைக்கும் ஈழநாடு!!
தமிழன் வாழும் தேசமெல்லாம் ஈழநாடு!
தலைசிறந்து வாழ்க எங்கள் ஈழநாடு!!

-கதிர் கூ. ஐயாத்துரை
சாவகச்சேரி.

### சிறுவர் மலர் மன்றம்

நல்லூர் சிறுவர் மலர் மன்றம் நடாத்தும் சிறுவர்மலர்' நிகழ்ச்சி குறித்து மன்றத்தின் செயலாளர் திரு ஜெ. ஜெய்ஹரன் எமக்கு பின்வருமாறு எழுதியுள்ளார்:

ஞாயிறு தோறும் நாம் நடாத்திவரும் 'சிறுவர்மலர்' விபரத்தை இத்துடன் அனுப்பும் பிரசுரம்மூலம் தங்களுக்கு அறியத்தருகிறோம். இப்பிரசுரத்தில் உள்ளபடியே தங்கள் பத்திரிகையில் பிரசுரித்து எமது 'சிறுவர்மலர்' எங்கும் மணம் வீச உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்று ஞாயிற்றுக்கிழமை சிறப்புநிகழ்ச்சிகள் பல சிறுவர்மலரில் இடம்பெறவுள்ளன.

நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக மில்க்வைற் அதிபர் திரு- கே- கனகராஜா கலந்துகொள்கிறார்- சிறுவர்கள் ஆண்டாகிய இவ்வாண்டில் எம்மை ஏமாற்றாது ஊக்கமும் உற்சாகமும் கொடுப்பீர்கள் என நம்புகிறோம்-

,நல்லூர் சிறுவர்மலர்' பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மதிப்புக்குரிய பெற்றோர்களே! பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிற்பகல் 2-00 மணி முதல் 4-00 மணிவரை நல்லூர் பருத்தித்துறை வீதியிலுள்ள 270ம் இலக்க இல்லத்தில் 'சிறுவர்மலர்' நிகழ்ச்சிநடைபெறுகின்றது. உங்கள் சிறுவர்களின் நன்மைக்காக நடைபெறும் இந்நிகழ்ச்சிக்குத் தாங்கள் சிறுவர்களைத் தவறாது அனுப்பி நிகழ்ச்சியைத் திறம்பட நடாத்த உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம், இந்நிகழ்ச்சிக்குஎவ்வித கட்டணமும் இல்லை.

இச் "சிறுவர் மலரில்" தேவாரம், தேவார விளக்கம், திருக்குறள், திருக்குறள் விளக்கம், நடனம், நாடகம், சங்கீதம், பொது அறிவு, ஆங்கில சம்பாஷணையும் பாடல்களும் நல்லொழுக்கம், அறிவுரைகள் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

### மரங்களின் விநோதம்!

காடைத்தனமானது - 'சண்டி'.மரம்.

அழுக்கடைந்த உடல் - 'குப்பை'மேனி

இதைப்போல் உலகெலாம் பிரகாசித்த மகான்-"சூரிய"காந்தி.

பாகுபாட்டைக் காட்டுவது - 'சாதி'க்காய்.

பெயருக்கு எதிரான செயலைக்கொண்டது - 'தேங்காய்'

பாரமற்றது; அடித்தாலும் - சத்தம் போடாது - 'குண்டு மணி'

தம்பியின் கரம் - 'மல்லி' 'கை'

காட்டிக்கொடுப்பது-சோயா 'அவரை'

வி. சந்திரகுமார்
யாழ். மத்தியகல்லூரி

# அன்புத்தோழன்

[26]

கொத்திமலையின் அடிவாரத்திலுள்ள ஒருமண்டபத்தில் பல இராசகுமாரர்கள் சிறை வைக்கப்பட்டு இருந்தனர். வேறொரு மண்டபத்தில் பல இளவரசிகள் சிறைவைக்கப்பட்டு இருந்தனர். மண்டபத்தைக் காவல்காத்த இராட்சதஉருவங்கள் மாண்டுபோய்க் கிடந்தன.

விக்கிரமன் பூட்டை உடைத்து சிறைக்கதவுகளைத் திறந்தான். பவளவல்லி மகிழ்ச்சியோடு ஓடிவந்து விக்கிரமனைக் கட்டித் தழுவினாள். விக்கிரமன் மகிழ்ச்சிப்பெருக்குடன் தங்கையின் கன்னங்களில் முத்தமிட்டான்.

'பவளவல்லி எல்லோரையும் அழைத்துக்கொண்டு அடிவாரத்திற்குப்போ, சிறிது நேரத்தில் அங்கு வருகிறேன். என்று கூறிய விக்கிரமன், கொத்திமலை ஆற்றுநீரை தான் கொண்டுவந்த பாத்திரத்தில் எடுத்து பவுத்திரப்படுத்திக்கொண்டு கொள்ளிக்காடனதுமாளிகையை அடைந்தான்.

அங்கே கொள்ளிக்காடன் வேதனையால் முனகிக்கொண்டிருந்தான். விக்கிரமன் தன் வாளை உருவி கொள்ளிக்காடனின் மார்பில் பாய்ச்சினான். சேதுபதியும் தனது வாளால் கொள்ளிக்காடனை வெட்டியது. கொள்ளிக்காடன் பலமாக அலறினான்.

கொள்ளிக்காடனின் உயிர் பிரிந்தது. அப்போது கொத்திமலை நடுங்கத்தொடங்கியது. விக்கிரமனும் சேதுபதியும் விரைவாக மதனகல்யாணியில் ஏறினர். மறுகணம் கொத்திமலை வெடித்துச்சிதறியது.

விக்கிரமன் மலைஅடிவாரத்தில் வந்திறங்கினான், இளவரசிகளும் இளவரசர்களும் விக்கிரமனுக்கும் சேதுபதிக்கும் நன்றி கூறினர்.

விக்கிரமன் இந்திரனை நினைத்தான். மறுகணம் இந்திரன் அவன்முன் பிரசன்னமானான்.

'தேவேந்திரனே நாம் நாடு திரும்புவதற்கு வேண்டியளவு குதிரைகள் வந்துதவவேண்டும்' என்று கேட்டான் விக்கிரமன்.

இந்திரன் புன்முறுவலுடன் மறைந்தான். விக்கிரமனது அலித்தன்மை நீங்கியது பல குதிரைகள் அங்குதோன்றின, இராசகுமாரரும் இளவரசிகளும் ஒவ்வொன்றில் ஏறி தம் நாட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

விக்கிரமனும், பவளவல்லியும், சேதுபதியும் மதனகல்யாணியில் ஏறியதும் அதுவானில் பறந்து மகேந்திரபுரியில் இறங்கியது. மகேந்திரபுரி மன்னன் அவர்களை மகிழ்ச்சிபொங்க வரவேற்றான்.

'அரசே தாங்கள் மதனகல்யாணியைத்தந்து உதவியதற்கு மிகவும் நன்றி. மதனகல்யாணியின் உதவி இல்லாவிட்டால் இவ்வளவு சீக்கிரமாக நான் கொத்திமலைக்குச் சென்றிருக்கமுடியாது' என்றான் விக்கிரமன்.

'விக்கிரமா நானல்லவா உனக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். நீ இல்லாவிட்டால் நான் மணிக்கொடியை மீண்டும் பெற்றிருப்பேனா' என்றான் மன்னன் நந்திவர்மன்,

அரசே நாம் மகேந்திரபுரி விருந்தினராக இன்னொருநாள் வருகிறோம். இப்போளமக்குப் போக விடைதாருங்கள்' என்றான் விக்கிரமன்.

'நல்லது விக்கிரமா சென்றுவா' என்றான் நந்திவர்மன். மணிக்கொடி மேல் மாடத்தில்நின்று கையசைத்து விக்கிரமனுக்கு விடை கொடுத்தாள்.

விக்கிரமனும் பவளவல்லியும் சேதுபதியும் நித்தியகல்யாணியில் விஜயபுரியைநோக்கிப் புறப்பட்டனர்.

[அடுத்த எண்ணத்தில்]

- சி. வி. குணசேகரம் -

### பஸ் வண்டி

புதிய நல்ல பஸ்வண்டி
அதிக அழகு பஸ்வண்டி
சிறீ லங்கா பஸ்வண்டி
'கிறீச்' சென்னும் பஸ் வண்டி

ந. நடனகுமார்
(5-ம் வகுப்பு)
யாழ். மத்திய கல்லூரி

### மாணவர் சிரிப்பு!

ஆசிரியர்: நாட்டில் தற்கொலை செய்பவர்களை தடுக்க என்ன வழியை மேற்கொள்ளலாம்?

மாணவன்: தற்கொலை செய்யத் துணிந்தவர்களுக்கு மரணதண்டனை என சட்டம் பிறப்பிக்கவேண்டும்,

பொ. கஜேந்திரன்
மகாஜனவித்தியாலயம்,
ஆவரங்கால்.

ஃ ஃ

மாணவன்: சார் உங்கள் பாடம்தான் மிகவும் விருப்பமாயிருக்கு.

ஆசிரியர்: ஏன் நான் படிப்பிப்பது அவ்வளவு சுவையாகவா இருக்கிறது?

மாணவன்: இல்லை சார். நீங்கள் படிப்பிக்கும் போது நாம் தூங்குகிறோம். நீங்களும் அதைக் கவனிப்பதாகத் தெரியவில்லை.

பொ. சாந்தி
சர்வோதயா வீதி,
ஆவரங்கால்.

ஃ ஃ

மகன்: (அம்மாவிடம்) அம்மா! அப்பாவுக்கு பைத்தியம் பிடித்து விட்டது!

தாய்: என்னடா! சொல்கிறாய்?

மகன்: அப்பா சொல்கிறார் நான் தலைகீழாக நிற்கிறேனாம்.

எம். முஹமட் அலி
(பழைய மாணவர்)
மருதமுனை-அல்-மனார் மகாவித்தியாலயம்.

### விஞ்ஞான கண்டுபிடிப்பு

1. ஆகாயக் கப்பல்-செப்பெலின், ஜெர்மனியர்-1900-ம் ஆண்டு.
2. வானொலி - மார்க்கோனி, இத்தாலியர்-1896.
3. கெலிகொப்டர் விமானம் - உரோல்டி - டெஸ்காரா, பிரான்சியர்-1895
4. சூழல் துப்பாக்கி-சொல்டர், அமெரிக்கர்-1835
5. தட்டச்சு-சோல்ஸ்ட், அமெரிக்கர்-1868
6. மோட்டார்சைக்கிள்-இடைமினர், ஜெர்மனியர்-1885

ஆ. திருமுருகன்,
யாழ். இந்துக்கல்லூரி.

### புதிய மூளை

அமெரிக்க விஞ்ஞானியான ஹரி உல்லாசப் பிரயாணியாக இலங்கையில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இலங்கையின் விஞ்ஞான வளர்ச்சியையும், ஆய்வுகளையும் நன்கு அறிந்திருந்ததுடன், இலங்கை மக்களையும் மட்டமாகவே கருதியிருந்தார். உலக நாட்டு மக்களின் மூளைகள் விற்பனை செய்யும் கடையொன்றைக் கண்ணுற்ற ஹரி, இலங்கையரின் மூளை ஒன்றை வாங்குவதில் ஆர்வம்கொண்டார். இலங்கையரின் மூளை ஏனைய நாட்டவரின் மூளையிலும் பார்க்க விலைகூடுதலாகவிருப்பதை அறிந்து ஆச்சரியப்பட்டு, அதன் காரணத்தை வியாபாரியிடம் வினவினார். அளப்பரிய விஞ்ஞான கண்டுபிடிப்புக்களை உலகுக்கு அறிமுகப்படுத்திய ருசிய, அமெரிக்க நாட்டு மக்களின் மூளையிலும் பார்க்க, எதுவித ஆய்வுகளையும் மேற்கொள்ளாத இலங்கையரின் மூளையின் விலை கூடுதலாகவிருப்பதே அவரது ஆச்சரியத்திற்குக் காரணமாகும்.

இலங்கையரின் மூளை எந்தவொரு ஆய்வுகளுக்கும் பயன்படுத்தாது புதிதாக இருப்பதே இவ்விலை ஏற்றத்திற்குக் காரணம் என்றார் வியாபாரி. இதைக் கேட்டதும் ஹரியின் முகத்தில் அசடு வழிந்தது.

த. முரளிதரன்
பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**RIO (Jaffna)**
Phone: 7607
Daily 4 Shows
**ANIMAL**
(Full length Comedy)
Family Entertainment

**வெஸ்லி**
(சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-பத்மபிரியா
**உறவு சொல்ல ஒருவன்**

**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-30&9-45
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
**பாக்தாத் பேரழகி**
(கலர்) (புதிய பிரதி)

இன்றுமட்டும்
தினசரி 4 காட்சிகள்
**மனோகரா** (யாழ்நகர்)
ஜெமினி-சாவித்திரி
**ஹலோ மிஸ்டர் ஜெமின்தார்**
(புதிய பிரதி)
26-3 79 முதல் இதயத்தில் நீ

13-வது வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா நடித்த
**எதிரொலி**
(புதிய பிரதி)

**REGAL** (Jaffna)
3rd CROWDED WEEK
Daily 4 Shows
2-00, 4-30,
7-00 & 9-30 p.m. only
JEAN PAUL - BELMONDO in
**THE HUNTER** (color)
(Spy film)
த ஹன்ரர்

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி
டி. ஆர். மகாலிங்கம்
**ஸ்ரீ வள்ளி**
(புதிய பிரதி—கலர்)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30&9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30
6-30 & 9-45
ஜெமினி — சாவித்திரி
**கடன்வாங்கிக் கல்யாணம்**
(புதிய பிரதி)

**லிடோ** (யாழ்.நகர்)
போன்: 7638 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
**ஆசை அறுபதுநாள்**

**சாந்தி** போன்: 7642
யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
விநோத் கன்னா... கபீர் பெடாய்...
**"குச்சே டாஃ"** —ஹிந்தி
**KUCHCHE DAAGE**—HINDI
IN EASTMAN COLOR
ROBBERY, [SUSPENSE, THRILL AND
—FULL OF ACTION PACKED FILM—
Music: LAXMIKHANT - PYARALAL
இந்தியாவில் சாம்பல் பள்ளத்தாக்கில் நடந்த பயங்கரக் கொள்ளைக் கோஷ்டியின் கதை.
பின்னணி இசை:- லதாமங்கேஷ்கர்

## கலட்டுத்தரை......

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மத்தியில் பிரபலப்படுத்த வேண்டுமென்று கருதியோ, அல்லது ஆக்கபூர்வமான திசையில் இழுத்துச்செல்லவேண்டுமென்ற அவாவினாலோ தவறான கோணத்தில் என்னைச் சந்திக்கு இழுத்திருப்பது எனக்கு வேதனையைத்தருகிறது

நான் புகழைநாடி ஓட விரும்பவில்லை. எனது திறமையை யாரும் புகழ்ந்தால் மயங்காமல் இருப்பதுவும் கிடையாது.

ஆகையால்...,

நண்பரே,

'கலட்டுத்தரை' பற்றிய எனது ஆய்வுரையைத் தாங்கள் பதிவுசெய்து வைத்திருந்தால் அதனை மீளாய்வுசெய்து நேர்மைத்திறனுடன், நெஞ்சுரத்துடன் அழித்தல் திருத்தலின்றி அப்படியே அம்பலப் படுத்துவீரா?

ஏன் தெரியுமா?

நான் மக்களுடன் சேர்ந்து வாழ்பவன். மக்களில் ஒருவன். மக்களால் உருவாக்கப்பட்டவன், மிகமிகச் சாதாரண ஏழை மனிதன்.

## ஒரு பாலை வீடு...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

சமகால நாடகஉலகில் கவித்துவத்தையும் கருத்தையும் செயலையும் வெற்றிகரமாக இணைத்து நாடகம் செய்தவர்களில் லோக்காவைப்போல வெற்றிகண்டவர்கள் மிகச் சிலரே.

நீண்ட விசாலமான வெள்ளைச் சுவர்கள், உயர்ந்து வளைந்த கதவுகள், வறுத்த அங்கிகளின் நடமாடும் சிறுமனிதஉருவங்கள், இவற்றிற்கு வெளியே தேவாலய சாவுமணியோசை, நாய்களின் ஓலம், தவறிழைத்த பெண்ணுக்கெதிராகக் கிராம மக்கள் நடத்தும் ஆக்ரோஷத்துடன்கூடிய ஆர்ப்பாட்டம், ஆடிப்பாடி அருவி வெட்டப்புறப்படும் ஆண்களின் கூச்சல்-இத்தனைக்கும் மத்தியில் கவித்துவ லயத்துடன் நாடகம் விறுவிறுப்புடன் நகர்ந்துசெல்கிறது.

நவீன நாடகப் பிரக்ஞையுடன் லோக்காவின் 'ஒருபாலை வீடு' நாடகத்தை சுண்டிக்குளி பழையமாணவிகள் சங்கத்தினர் மேடையேற்ற முன்வந்திருப்பது தற்போது யாழ்நகரில் துளிர்த்துவரும் நாடக விழிப்புணர்வினைக் கோடிகாட்டுவதாக உள்ளது. வெறும் பொழுதுபோக்கு நாடகங்களை விடுத்து, இவர்களைப்போல வேறு அமைப்புக்களைச் சார்ந்தவர்களும் கனமான நாடக முயற்சிகளை மேற்கொள்வது பரவலான தமிழ்நாடக வளர்ச்சிக்குத் துணைசேர்ப்பதாக அமையும். இந்தவகையில் இவர்களின் முயற்சி மனமுவந்து வரவேற்கத்தக்கது.

'கண்ணாடி வார்ப்புகள்', 'புதிய உலகம் பழைய இருவர்' ஆகிய உலகப்பிரசித்தி பெற்ற நாடகங்களை தமிழில் நன்கு மொழிபெயர்த்த நிர்மலா நித்தியானந்தன், 'ஒரு பாலை வீடு' என்ற இந்த ஸ்பானிய நாடகத்தினையும் மொழி பெயர்த்துள்ளார்.

தமிழ்நாடக உலகம் புதிய நம்பிக்கைகளை நிறையவே வைத்திருக்கும் க. பாலேந்திராவின் நெறியாள்கையில் 'ஒரு பாலைவீடு' தயாராவது நாடக ஆர்வலர்களுக்கு நிறைவுதரும் செய்தியாகும். சுண்டிக்குளி பழைய மாணவிகளே முழுக்க முழுக்கத்தோன்றி நடிக்கும் 'ஒருபாலைவீடு' நாடகம், இம் மாதம் 31ந் திகதி சனிக்கிழமை மாலை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் மேடையேறவிருக்கிறது.

-என்.பி.என்-

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர் - ராதா சலுஜா
**இதயக்கனி**

# ஆர். ரி. எஸ். சொன்ன அன்னதானக் கதை

[கைதடி சைவச்சிறுர் இல்லக் கொடிநாள் விழாவன்று அமரர் வே. குமாரசாமி ஞாபகார்த்தமாக அன்னார் அறங்காவற் குழுவினரால் அளிக்கப்பட்ட அன்னதான வைபவத்தில் குழுத்தலைவர் ஆசிரியமணி ஆ. ரி. சுப்பிரமணியம் பேசுகையில் சொல்லியது.]

புராதன காலத்தில் ஒரு உத்தமரான புரோகிதர் வாழ்ந்தார்; ஊரில் நடைபெறும் சிராத்தங்களையும் இதரபுரோகிதங்களையும் விதிப்படி செய்து அதனால் வரும் சொற்ப வருமானத்தைக் கொண்டே சுஷ்டசீவனம் நடத்திவந்தார். அவரின் துணைவியாரும் வருவாய்க்கேற்ப ஏதோ வளமாக வாழ்ந்து தங்கள் ஏக புத்திரனையும் நன்கு போஷித்து வந்தார். காலஞ்சென்றது. மகனுக்கு இருபத்தொரு வயதானதும் அந்தப் புரோகிதர் (ஐயர்) காலமானார்.

தாயும் தநயனும் தியங்கித் தவித்தனர். பின்பு புரோகிதர் காலத்துப் பரிமளிப்பும் மறைந்தது. ஏதோ புத்திர



ஆசிரியமணி
ஆர். ரி. சுப்பிரமணியம்

னும் தந்தை வழி வந்த தொழிலையே செய்து தன்னையும் தன் முதுமையடையும் தாயையும் காப்பாற்றலாயினன். ஆனால் பிரதிதினமும் மத்தியான உணவின்போது யாராவது ஒரு அதிதியை வைத்தே தாய் உணவுபரிமாறினுள். இஃது மகனுக்குப் பிடிக்கவில்லை.

'அப்பா காலத்தில் ஏதோ செப்பமாக வாழ்ந்தோம். அவரும் தினமும் ஒருவருக்கு அன்னமிட்டே உணவு உட்கொண்டார். இப்பவோ வருவாய் மிகக்குறைவு! எனக்கோ உணவுபோதுவதில்லை. நிலைமை இப்படியிருக்கும் போது-அம்மா நீ எப்படி சும்மா போறவனைத்தேடி அழைத்து அன்னதானம் போடுகிறுய்?' என்று வேதனையுடன் மகன் கூறினுன். இனிமேலும் புரோகிதத்திற்குப் போகமாட்டேன் என்றும் அடம்பிடித்தான்.

இதைக் கேட்ட அன்னை பதைபதைத்து (தன் காதுகளைப் பொத்தி) 'மகனே இப்படித் தகாத வார்த்தை பேசாதே-ஐயா! அன்னதானத்தின் மகிமையை கடவுள் ஒருவரே அறிவார். இதனுலேதான் சில சமயம் நான் சாப்பிடாமலும் அதிதிக்கு உன்னுடன் வைத்து உணவு அளித்தேன்' என்றுர்.

மகன் பாடு திண்டாட்டமாயிற்று; கோபமும் வேதனையும் ஒரு வேகமாகமாறியது. எழுந்தான்

''அப்படியானுல்அம்மா! அந்தக்கடவுளை நான் இக்கணமே கண்டு-அன்னதான மகிமை பற்றிக் கேட்டுவரப்போகின்றேன். நான் வரும்வரை அக்கடவுள் உன்னையும் காப்பாற்றட்டும்' என்று கூறியபடியே உடைமாற்றினுன்.

கண்ணீர்மல்க - அவனை நோக்கிவந்த அன்னை 'கடவுளைக் காணச்செல்லும் உனக்கு இதோ என் ஆசீர்வாதம்' என்றுஉச்சிமோந்தாள் தாயை வணங்கிய தனையன் (மின்வேகத்தில்) கடவுளைத்தேடி மலையடிவாரம்நோக்கிக் கடுகிநடந்தான். வேகம் குறைந்தது. பொழுதுமறைந்தது. காடுகள் மிகுதியாயின, நேரமோ இரவு பத்து பதினொன்றுயிற்று, வனவிலங்குகள் உறுமல்! ஏக்கம் தன்னைத் தழுவவும் இலட்சியத்தில் உறுதிதளராது நடந்தான். ஒருவெளிச்சம் தெரிந்தது. அங்குபோய் இரவு தங்கி பொழுதுபுலர்ந்ததும் தனது யாத்திரையைத் தொடர எண்ணி அவ்வெளிச்சத்தை நோக்கி நடந்தான். வெளிச்சம் தெரிந்த இடமோ அஃது ஒரு வன வேடனின் சிறுகுடிசை. வேடனும் மனைவியும் பக்கத்துப் பாலை மரத்தில் உள்ள 'பரணில்' (அட்டாளை) ஏறி இராப்பொழுதைக் கழிக்க தயாரிக்கொண்டிருந்தனர். ஐயர் வரவு கண்டு அதிசயித்துத் தாமதித்தனர் இனி தாமதிப்பது உயிராபத்து என்று உணர்ந்த வேடன் தமது இரவுணவாகிய தேனையும் மாவையும் கையில் எடுத்தபடி மரத்தில் ஏறமுன்-ஐயரையும் தம்முடன் ஏறி மரத்தில் துயின்று காலை போகுமாறு அழைத்தான். நல்லவன். மனைவியோ எதிர் மாறு. மூவரும் மறுகணம் மரத்தில் ஏறிவிட்டனர். படுக்கையில் இருவர்தான் படுக்கலாம். உணவோ இருவருக்கே அரும்பொட்டு. 'என்னுடைய பங்கு உணவில் அல்லது படுக்கையில் ஒரு இம்மியளவும் விடமாட்டேன்' என்று வேடன் மனைவி ஒரு பிரகடனம் விடுத்தாள். ஐயர் பயந்தேபோனுர். தாயை நினைத்தார். வேடன் 'சரி...சரி சண்டைஏன்? எனது பங்கு உணவும். படுக்கையும் இன்றிரவு மாத்திரம் இந்த ஐயர் அவர்களுக்கு - நீ மூச்சுக் காட்டாதே' என எதிர்மாற்றம் கூறினுன். ஐயர் வேடன் பங்குத்தேனையும் மாவையும் உண்டு ஒடுங்கி அடங்கிப் படுத்தார்-தன்னை மறந்த நித்திரை வேடன் பாலையில் உள்ள விசாலமான கழுந்து ஒன்றில் இதமாக இருந்து கொண்டே 'அறிதுயில்-கோழி உறக்கம்' கொண்டான். வைகறைப்பொழுதுக்குச் சற்று முன்பு கொடிய தூக்கம் காரணமாக வேடன் கீழே வீழ்ந்தான். விலங்குகளை இற்றைவரை விரட்டிய வனவேடன் உடல் முழுதும் சொற்பவேளையுள் விலங்குகளுக்கு விருந்தாயின.

சற்றே பொழுது புலர்ந்தது. ஐயர் விழித்தார். கொடி ஏணிமூலம் கடுகிக் கீழேஇறங்கினுர். வேடனைக்காணவில்லை. அவ்வேடுவப்பெண்கீழேஇறங்கி வந்து வசைபுராணம் ஆரம்பிக்குமுன்பே ஐயர் கனதூரம் சென்றுவிட்டார். அவள் இறங்கி துடையில் அடித்து ஐயருக்கு அர்ச்சனை நடாத்தினுள்.

பகல் ஒன்பது மணியளவில் கானகத்தருகே மாணிக்கவாசகருக்கு சிவஞானம் போதித்த பரமாசாரியார்போன்ற தவசிரேட்டர் ஒருவர் இருக்கக் கண்டு-பணிந்து தன் கருத்தை ஐயர் கூறினுர். அதற்கு 'கடவுளைக் காண்பதிலும் உனக்கு அன்னதானத்தின் பெருமையை அறிவதுதானே முக்கியமாகும். ஆதலின் நீ நேரே இன்னும் மூன்றுகல் தொலைவு செல். அங்கே ஒரு நகரம் தென்படும். நகரத்து நடுவில் உள்ள அரண்மனையை நாடிப் போ. உன்னை காவலர் தடுப்பர். நான் அரண்மனையில் அரசரைக் காணவேண்டும் இளவரசற்றுத் துன்புறும் இந்நகரத்திற்கு ஒரு இளவரசு கிடைக்கவகை செய்யவேண்டும் என்று துணிந்து கூறு; போ துணிவுடன். அரசரைக்கண்டு நான் இதோ தரும் இச்செப்பில் உள்ள விபூதியை அரசிக்கு பூசும்படி கொடு. ஒருவருடத்தினுள் அரச தம்பதிக்குப் புத்

[10ம் பக்கம் பார்க்க]

## அரசின் சலுகைகளுடன் இந்தியா சென்ற

# 'அமிர் இலங்கை அரசுக்கு எதிராக நஞ்சைக் கக்குகிறார்'

### அமைச்சர் சிறில் மத்யூ சபையில் அறிக்கை

(கொழும்பு)

'அரசின் சலுகைகளைப் பயன்படுத்தி இந்தியாவில் விஜயம் மேற்கொண்டுவரும் எதிர்க்கட்சித் தலைவர் இந்தியாவில் இலங்கை அரசுக்கு எதிராக நஞ்சைக் கக்குகிறார். திருமதி அமிர்தலிங்கமும் அரசுக்கு எதிராகப் பேசிவருகிறார். 'பெண்களின் நாக்கு பற்களைவிடக் கூர்மையானது' இவ்விஷயத்தில் அரசு மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

இலங்கையில் கற்பழிக்கப்படுகிறார்கள். தமிழர்கள் வீதிகளில் நடந்து செல்ல முடியாத நிலை உள்ளது' என்றெல்லாம் இலங்கை அரசுக்கு எதிராக திரு அ. அமிர்தலிங்கமும் திருமதி அமிர்தலிங்கமும் இந்தியாவில் உரையாற்றியுள்ளார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் திரு. அமிர்தலிங்கம் அங்கு சென்றமையினாலேயே இந்தியாவில் அவருக்குச் சலுகைகளும் வரவேற்புகளும் அளிக்கப்படுகின்றன. கூட்டணித் தலைவர் என்ற ரீதியில் சென்றிருந்ததால் இச் சலுகைகள் வரவேற்புகள் எல்லாம் கிடைத்திருக்காது.

இவ்வாறு விஞ்ஞானக் கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்யூ நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஒத்திவைப்புப் பிரேரணையின் போது திரு மத்யூ தமது அறிக்கையை வாசித்துக்கொண்டிருக்கையில் குறுக்கிட்ட பதில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் உரிமைப் பிரச்னை ஒன்றைக் கிளப்பினார்.

திரு. அமிர்தலிங்கத்தின் விவகாரம் குறித்து அமைச்சர் இப்போது பேசமுடியாது முடியுமானால் தனியான பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தே பேசமுடியும் அத்துடன் திரு. அமிர்தலிங்கம் இப்போது நாட்டில் இல்லை. அவர் இச்சபையில் இருந்தாலே அமைச்சரின் கேள்விகளுக்கு பதில் கூறமுடியும்.

இவ்வாறு திரு. சிவசிதம்பரம் தமது உரிமைப் பிரச்னையில் தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட அமைச்சர் திரு மத்யூ திரு அமிர்தலிங்கம் மீது தனிப்பட்ட நபர் என்றமுறையில் இந்த அறிக்கையை விடுக்கிறேன் என்றார்.

திரு சிவசிதம்பரம் இதற்குப் பதிலளிக்கையில் கூறியதாவது;

திரு அமிர்தலிங்கம் இந்தியாவில் இருப்பதாகவும் இலங்கையிலிருந்தாலும் அல்லது வேறு எங்கிருந்தாலும் அமிர்தலிங்கம் அமிர்தலிங்கம்தான். அவர் காங்கேசன்துறையிலிருந்து இச்சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரு எம் பி எதிர்க்கட்சித் தலைவர். இல்லாவிட்டாலும்கூட அவர் ஒரு எம் பி. அவர் தமது பதவியை இன்னமும் ராஜினாமாச்செய்யவில்லை- எனவே அவரைத் தனிப்பட்ட நபர் என்று கூற முடியாது. அவர் நாடு திரும்பியதும் இப்பிரச்னையைக் கிளப்புங்கள்.

சபாநாயகர் ஜனாப் பக்கீர் மாக்கார் திரு. சிவசிதம்பரத்தின் உரிமைப் பிரச்னையை ஏற்றுக்கொண்டார்.

அடுத்து ஊவாபரணகம எம். பி. எழுந்து திரு. அமிர்தலிங்கத்தின் இந்தியப் பேச்சுக்கள் குறித்துப்பேசினார்.

அப்போது குறுக்கிட்ட சபாநாயகர், திரு. மத்யூ பேசியதையே நீரும் கூறுகிறீர் என்று சொல்லத் தாம் திருமதி அமிர்தலிங்கத்தைப் பற்றியே இங்கு பேசப்போவதாகக் கூறினார்,

#### சபையில் கூச்சல் கரகோஷம்

அப்போது சபையின் பின் வரிசை எம். பி.க்கள் கரகோஷம் செய்து கூச்சலிட்டனர். திருமதி அமிர்தலிங்கம் யார்? அவருக்கு என்ன தண்டனை வழங்கப்போகிறீர்கள் என நான் பிரதமரிடம் கேட்கிறேன் என்று ஊவாபரணகம எம். பி. கேட்டார்.

#### பிரதமர் கருத்து

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம் ஒரு பொறுப்பு வாய்ந்தவர். அவரது பேச்சுக்கள் தவறாக வெளியிடப்பட்டிருந்தால் அவர் இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரக மூலம்தொலைபேசியில்மறுப்புத் தெரிவித்திருக்கலாம். இந்த வசதிகள் இருந்தும் அவர் மறுக்கவில்லை.

அவர்தான் மறுக்காவிடினும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் என்ற ரீதியில் திரு. சிவசிதம்பரம் கூட மறுத்திருக்கலாம்.

கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம் இந்தியாவிலிருக்கும் திரு. அமிர்தலிங்கத்துடன் தொடர்புகொண்டு இச்செய்தி குறித்து விளக்கமோ அன்றி மறுப்போ தெரிவித்திருக்கலாம்.

#### எனக்கு அவமதிப்பாம்

திரு. அமிர்தலிங்கத்தின் இந்திய பேச்சுக்கள் வெளிவந்த 'தினபதி' பத்திரிகைவெட்டுத் துண்டுடன் ஒருவர் எனக்குக் கடிதம் எழுதியுள்ளார். திரு அமிர்தலிங்கத்தின்பேச்சுஎனக்குப் பெரும் அவமதிப்புஎன்று அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றும் பிரதமர் கூறினார்.

#### யோகேஸ் குறுக்கீடு

ஒரு கட்டத்தில் இலங்கையில் 100க்கு மேற்பட்ட தமிழ் பெண்கள் கற்பழிக்கப்பட்டதாக திரு. அமிர்தலிங்கம் இந்தியாவில் கூறியுள்ளார் என்று திரு. மத்யூ. தெரிவித்தபோது குறுக்கிட்ட யாழ். எம். பி. திரு யோகேஸ், ஆகஸ்ட் கலவரத்தின்போது இடம்பெற்றதையே திரு. அமிர்தலிங்கம் கூறியுள்ளார் என்றும் அதில் என்ன தவறு இருக்கிறது என்றும் கேட்டார்.

அடுத்து திரு மத்யூ. யார் யாரைக் கற்பழித்தது என்று எமக்குத் தெரியும் என்று கூறியதைத் தொடர்ந்து இருவருக்குமிடையே வாக்குவாதம் இடம்பெற்றது.

சபாநாயகர் தலையிட்டதை அடுத்து இருவரும் அமர்ந்துகொண்டனர். [ம-இ]

### ஆர். ரி. எஸ்......

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

திரன் கிடைப்பான். உனக்கு அவன் பிறந்த அன்றே அன்னதான மகிமையையும் கூறுவான்' என்று விடைகூறி விபூதி வழங்கி ஆசீர்வதித்தார். ஐயர் வீழ்ந்து வணங்கி நல்ல நம்பிக்கையுடன் (விறுடன்) நடந்தார். மன்னன் மாளிகை வாசலில்- காவலரின் ஏழனப் பேச்சு. 'டலர் உம்மைப்போல் ஏமாற்றப் பார்த்து தலை நொய்யப்பட்டனர்.'

ஐயர்- 'நான் ஓடமாட்டேன். என் வாக்குப்பொய்த்தாலன்றோ சிரச்சேதம். நான் அரண்மனையிலேயே தங்கியிருக்கத் தயார்.' இச்செய்தி கேட்ட மன்னன் அனுமதி வழங்கினான்.

விசுவாச மரியாதையுடன் விபூதியை பக்திசிரத்தையுடன் அரசியும் ஏற்றுப்பூசினாள். ஐயர் அங்கு வசிக்க சாலை வழங்கப்பட்டது. மூன்று மாசம் முடியுமுன்பே முடிமன்னனும் அரசியும் ஐயருக்கு இராசோபசாரம் செய்யத்தலைப்பட்டனர்.

பத்துமாசமானதும் பாலன் பிறக்கும்போது - ஐயருக்கும் தெரிவிக்கப்பட்டது. அரண்மனையில் ஐயரின் வாக்கே இப்ப வேதவாக்கு. 'இளவரசன் பிறந்ததும் புனிதநீராட்டி தங்கத்தாம்பாளத்தில் கிடத்தி அரச அவைக்கு கொண்டுவரவும்' இது ஐயரிட்ட கட்டளை. யார் அதை அலட்சியப் படுத்துபவர்?

அவ்வாறே திருவோண நட்சத்திரம்கூடிய சுபவேளையில் அரச அவைக்கு கொண்டுவந்தனர். இளவரசனைப் பார்த்து ஐயர் வருங்காலமாமன்னனே! அன்னதானத்தின் மகிமையை இம்மன்னர் அவையில் அனைவரும் அறிய உரைப்பாய்'' என்று குறையிரந்தார். அக்குழந்தை காலையாட்டிநேரிட்டு நோக்கி ''ஐயா! அன்று உம்மை அர்த்த இராத்திரியில் அகாலவேளையில் வரவேற்று பெரிய பாலைமரத்தில் உண்டியும் உறையுளும் அளித்துப் பாதுகாத்து-நான்வைகறைக்கு சற்றுமுன்பு தாக்கம் காரணமாக விழ்ந்து இறந்தேன். உண்டிவழங்கி உயிர்காத்த புண்ணிய பலனால் ஓராண்டுகள் பாராளும் பரம்பரையில் இங்குவந்துதித்தேன். கேட்டீரா அதன் மகிமையை'' என்று தன் பொக்கைவாயைத் திறந்தது. கிரிட்பு!

ஐயர் ஆடினார், பாடினார். மன்னனின் வரிசைகளுடன் பெருநிதியமும் பெற்று தன் தாயிடம் மீள்வாராயினர்.

## வேலணையில் இன்று

(வேலணை)

பாவலையாளர்களின் பாதுகாப்புச்சட்டம்பற்றிய கருத்தரங்கொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகலிங்கம்

சங்கானையைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஆறுமுகம், நாகலிங்கத்தின் மனைவியும், பூரணம் (ஓய்வுபெற்ற ஆசிரியை). திசைவீரசிங்கம் (ஓய்வுபெற்ற அரசசேவையாளர்) பரிமளம் (ஆசிரியை இந்துக்கல்லூரி பம்பலப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (25 3-79) ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணிக்கு மடத்தடி காரைநகர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று சங்கானை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். 2004

## மரண அறிவித்தல்

### திரு. செ. சரவணபவன்

யாழ். நியூற்ரேன் எலெக்றிக்கல்ஸ் நிறுவனத்தில் கடமையாற்றும் சரவணபவன் காலமானார். இவர் முன்னாள் யாழ்ப்பாணக்கல்லூரி நூல் நிலையப் பொறுப்பாளர் காலஞ்சென்ற க. செல்லையா, திருமதி சொர்ணம் செல்லையா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் திருமதி அருணாவின் (வசந்தா) அருமைக் கணவரும் அபர்ணாவின் அன்புத் தந்தையும், திருமதி யோகலக்ஷ்மி ஜெகதீசன், திருமதி இராசலக்ஷ்மி இராசரத்தினம், திருமதி இராஜேஸ்வரி வைரவிப்பிள்ளை (கலிபோர்ணியா), திருமதி இராஜமலர் நேமிநாதன் (இங்கிலாந்து) டாக்டர் சூரியகுமார் ஆகியோரின் அன்புச்சகோதரரும், திரு திருமதி இ. இரத்தினதுரை அவர்களின் அன்பு மருமகனுமாவார். ஈமக்கிரியைகள் (இன்று) 25-3-79-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அராலி வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11-00 மணியளவில் அராலி வடக்கு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும். 2000

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா சோமசுந்தரம்

திருமதி இராசம்மா சோமசுந்தரம் காலமாகிவிட்டார். இவர் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா சோமசுந்தரத்தின் மனைவியும், திரு. வடிவேலு (ஆசிரியர் வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்), திரு. பசுபதி (செல்வம்), திரு. நித்தியானந்தன் (சீ-நோர்), திருமதி பரராசசிங்கம் (ஆசிரியை உடுவில் மகளிர் கல்லூரி), செல்வி கமலாம்பிகை (D. D. A. தம்பலகாமம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி வடிவேலு (ஆசிரியை சைவப்பிரகாச வித்தியாசாலை (வேலணை), திரு கு பரராசசிங்கம் (வேலைப் பரிசோதகர் கச்சேரி, யாழ்ப்பாணம்), திருமதி பசுபதி ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (25-3-79) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சாட்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 2005

## மரண அறிவித்தல்

### திருமதி விசுவநாதன் மாரிமுத்துப்பிள்ளை

கந்தரோடை காலஞ்சென்ற விசுவநாதனின் அன்பு மனைவி மாரிமுத்துப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் மங்கைநாயகி, மாணிக்கவாசகர் (ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), வைத்தியநாதன் (ஆசிரியர் கொழும்பு இந்துக்கல்லூரி) ஆகியோரின் தாயாரும், கதிரேசு (இளைப்பாறிய C.W. E மேற்பார்வையாளர்), திலகவதி (ஆசிரியை ஸ்கந்தவரோதயக் கல்லூரி), தெய்வநாயகி ஆகியோரின் மாமியாரும், அப்புத்துரை, சண்முகநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தினி, சாந்தகுமார் (I I T, சென்னை), நந்தினி, செல்வினி, தர்சினி, இராஜகுமார், மயூரகுமார், மயூரன், விசுவநாதன், அருணா, கவிவாணன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கந்தரோடை சங்கம்புலவு மயானத்தில் இன்று (25-3-79) ஞாயிற்றுக்கிழமை பகல் ஒரு மணிக்கு நடைபெறும். உறவினர், நண்பர், ஆசிரியர், மாணவர் அனைவரும் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும். 2006




கஸ்தூரி கற்பூரம்



(1957)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389,